வாராந்த சஞ்சிகை

ஜூன் 10 - 16 - 2015

# சுடர் ஒளி

பக்கம் 24

விலை 30/-



# குற்றங்களும் குறட்டையும்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உலகில் மிகச் சிறிய உலக அழகியாக உக்ரைனைச் சேர்ந்த பத்து வயது சிறுமியொருவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

உக்ரைன் லுட்ஸ்க் நகரைச் சேர்ந்த அனா கிளிமோவெட்ஸ் என்ற சிறுமியே இவ்வாறு மிகச் சிறிய உலக அழகியாக தெரிவாகியுள்ளார்.


Little Miss World போட்டி யானது அண்மையில் துருக்கியிலுள்ள பொட்ரம் நகரில் மிக கோலகலமாக நடைபெற்றது.

இதேவேளை, உக்ரேனைச் சேர்ந்த ஆணழகராக ஆர்செனி மெகேகா என்ற சிறுவன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.




# உலக அழகியாக பத்து வயது சிறுமி

# 3 வயது குழந்தையை மீட்க உதவிய நாய்



காட்டில் இருந்த நாட்களில் சிறுமி கரினா, பழங்களை தின்றும், ஆற்று நீரை குடித்தும் உயிர் வாழ்ந்தது கண்டுபிடிக்கப் பட்டது.

ரஷ்யாவின் சைபீரியாவில் வசித்து வரும் ஒரு தம்பதியின் மூன்று வயது மகள் கரினா சிகிட்டோவா. இவள், வீட்டில் யாரும் இல்லாத போது திடீரென மாயமானாள். கரினா வீட்டில் இருப்பதாக அவரது தந்தையும், தந்தையுடன் சுற்றுலா சென்றிருக்கலாம் என அவரது தாயும் நினைத்ததால், குழந்தையை யாரும் தேடவில்லை. 7 நாட்களின் பின்னர் தான் குழந்தை மாயமாகியது தெரியவந்தது.

இதனால் அதிர்ச்சியடைந்த அவளது பெற்றோர் மீட்புக்குழுவினருடன் பல் வேறு இடங்களிலும் கரினாவைத் தேடி னர். ஆனால் எந்தப் பலனும் இல்லாத தால், குழந்தை இனி கிடைக்கமாட்டாள் என்ற முடிவுக்கு வந்தனர்.

குழந்தை காணாமல்போய் 11ஆவது நாளில் குழந்தையின் செல்ல நாய் காட்டுப் பகுதியில் இருந்து வந்தது. பின்னர் அது காட்டுப்பகுதிக்கு மீண்டும் சென்றது. உடனே மீட்புக்குழுவினர் நாயைப் பின் தொடர்ந்தனர். அடர்ந்த காட்டுப்பகுதியில் சென்ற போது, அங்கே நீண்ட புற்களின் மேல் குழந்தை கரினா படுத்திருந்தாள். உடனே குழந்தையை மீட்புக்குழுவினர் மீட்டு வந்தனர்.

அண்டார்டிக்காவிலுள்ள சுமார் 10,000 வருடங்கள் பழமையான 'லார்சென் ய' என்ற பனி ¶ Ice Shelf) தற்போது பலவீனம் அடைந்து வருவதாகவும் 2020 ஆம் ஆண்டுக்குள் அது முற்றாகக் கரைந்து விடும் எனவும் நாசாவின் புதிய ஆய்வு ஒன்று எச்சரித்துள்ளது.

இன்னும் ஓர் தசாப்தத்துக்குள் அழிந்து விடும் என அஞ்சப்படும் குறித்த பனி அடுக்கு, அண்டார்டிக்காவில் பனி மற்றும் தண்ணீர் சமநிலையில் முக்கிய பங்கு வகிப்பதாகக் கூறப்படுகின்றது.

பனி அடுக்குகளானவை (Ice Shelf) கிளேசியர் (Glaciers) எனப்படும் பனிப்பறை சறுக்குகளுக்குத் தடையாக (barriers) செயற்பட்டு வருபவை ஆகும். இவை மறைந்து போனால் பனிப்பாறை சறுக்குகள் மிக விரைவாகச் செயற்படும். இதனால் குறுகிய காலத்தில் உலகளாவிய ரீதியில் கடல் மட்டம் உயரவும் அதனால் சிறிய தீவுகள் அழிந்து போகும் அபாயமும் ஏற்படும் என்பது குறிப்பிடத்தக்கது. இது குறித்த ஆய்வை மேற்கொண்ட நாசாவின் JPL ஆய்வு கூடத்தின் அலா காஷெண்டர் தலைமையிலான குழு கூறுகையில்,




# அண்டார்டிக் பனி 2020 அழியும்?

உண்மையில் மிக விரைவில் பனி அடுக்குகள் காணாமற் போவது என்பது நமது பூமிக்குக் கெட்ட செய்தி என்று தெரிவிக்கின்றனர்.

முதன்முறை 2002 ஆம் ஆண்டு அண்டார்டிகாவில் பாரிய பனிப்பாறைச் சரிவு இனம் காணப் பட்டது டன் 6 கிழமைகளுக்குள் மிகப் பெரியளவிலான பனி அடுக்கு ஒன்று எதிர்பாராத விதமாக கரைந்து போனதும் புவியியலாளர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கி இருந்தது. இந்நிலையில் 10,000 வருடம் பழமையான லார்சென் ய பனி அடுக்கு 1995 ஜனவரியில் 4445 சதுர மைல் அளவிலும் பெப்ரவரி 2002 இல் பெருமளவு கரைந்து 25%3 சதுர மைலாகவும் ஒரு மாதத்துக்குள் 1337 சதுர மைலாகவும் அளவு குறைந்து போயிருந்தது. தற்போது 618 சதுர மைல் அளவில் இருக்கும் லார்சென் ய பனி அடுக்கு, இரு தசாப்தங்களுக்கு முன்னர் அமெரிக்காவின் கனெக்டிக்கர் மாநிலம் அளவில் இருந்து இன்று அமெரிக்காவின் மிகச் சிறிய தீவான ரோட் (Rhode Island) அளவுக்கு சுருங்கி விட்டது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரும்பான்மை இனமாக முஸ்லிம்கள்



ஆசாத்

முஸ்லிம்கள் சரியா சட்டத்தை அல்லாவால் நேரடியாக வழங்கப் பட்ட கட்டளைகள் என்றே நம்புகின்றனர். எனவே அவற்றை எவரும் விமர்சனம் செய்வதையோ வியாக்கியானம் செய்வதையோ விரும்புவதில்லை. அப்படியான நடவடிக்கைகள் முழு முஸ்லிம் சமுதாயத்தையும் அவமதிக்கும் செயலென்றே நம்புகின்றனர். சரியா சட்டங்கள் முஸ்லிம்களின் தனித்துவமான அடையாளங்கள் வெளிப் படுத்தும் முக்கியமான அம்சங்களில் ஒன்று என்றே கருதப்படுகிறது.

அண்மையில் பொதுபலசேனா வின் பொதுச்செயலா் கலகொட ஞானதேரர், இன்னும் சில காலத்தில் முஸ்லிம்கள் இலங்கையில் பெரும் பான்மை இனமாக மாறிவிடுவார் கள் எனவும், முஸ்லிம் பெண்களுக்கு கருத்தடை செய்ய அனுமதிக் கப்படுவதன் மூலம் அந்த அபாயம் தடுக்கப்பட வேண்டும் எனும் முஸ்லீம் களுக்கான சரியா சட்டம் அனுமதிக்கப் படுவது நிறுத்தப் பட்டு அவர்களையும் எல்லோர்க்கும் பொது வான சட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட வேண்டும் என வும் கருத்து வெளியிட் டுள்ளார்.

இதை நாம் ஒரு மதவாதியின் உளறல் எனத் தவிர்த்து விடமுடியாது. கடந்த காலங்களில் பல பள்ளி வாசல்கள் தாக்கப்பட்டமைக்கும் பேருவளை, அளுத்தகம, தர்க்காநகர் ஆகிய பகுதிகளில் முஸ்லிம்களுக்கு எதிராகப் பெரும் இன வன்முறை நடத்தப்பட்டு உயிரழிவுகளும் உடைமைகள் இழப்புகள் உண்டாக்கப்பட்டதற்கும் பின்னணியில் பொது பலசேன நின்று செயற்பட்டதை நாமறி வோம். ஆனால் இவை தொடர்பாக இந்த அமைப்பைச் சேர்ந்த எவரும் கைது செய்யப்படவோ தண்டிக்கப்பட வோ இல்லை. இவர்கள் உடையார் வீட்டுக் கோழி முட்டைகளாகக் குடியானவர் வீட்டு அம்மிகளை உடைத்தமை யை எவரும் மறந்து விட முடியாது.

முஸ்லிம்கள் சரியா சட்டத்தை அல்லாவால் நேரடியாக வழங்கப்பட்ட கட்டளைகள் என்றே நம்புகின்றனர். எனவே அவற்றை எவரும் விமர்சனம் செய்வதையோ வியாக்கியானம் செய்வதையோ விரும்புவதில்லை. அப்படியான நடவடிக்கைகள் முழு முஸ்லிம் சமுதாயத்தையும் அவமதிக் கும் செயலென்றே நம்புகின்றனர். சரியா சட்டங்கள் என்பன முஸ்லிம்களின் தனித்துவமான அடையாளங்களை வெளிப் படுத்தும் முக்கியமான அம்சங்களில் ஒன்று என்றே கருதப்படுகிறது.

சரியா சட்டத்தின் அடிப்படையில் ஒரு ஆண் சட்டப்படி நான்கு திருமணங்கள் செய்வதற்கு அனுமதி உண்டு. அவர்கள் அப்படி ஆண்கள் திருமணம் முடிக்கும் போது பெண்களுக்கு ஆண்களே சீதனம் வழங்க வேண்டும். அதாவது ஒரு முஸ்லிம் தனது மனைவியையோ அல்லது மனைவியரையோ பராமரிக்கும் பொருளாதார தகைமை கொண்டவராக இருந்தால் மட்டுமே அவர் ஒரு திருமண மோ அல்லது பல திருமணங் களோ செய்ய முடியும்.

இந்தச் சரியாச் சட்டம் இலங்கையின் தேச வழமைச் சட்டத் தின் கீழ் அரசியலமைப்புச் சட்டத்தாலும் அங்கீகரிக்கப் பட்டுள்ளது. மேலும் சரியாச் சட்டம் கருத்தடை சத்திரசிகிச்சை உட்படக் கருத்தடை முறை மைகளையும் கருக்குலைவு செய்யப் படுவ தையும் கடுமை யாகத் தடை செய்துள் ளது.

இந்த விடயம் இலங்கை ஒரு சிங்கள பௌத்த தேசம் என உரிமைகொண்டாடும் இனவெறி பிடித்த ஜென்மங்களுக்கு அச்சுறுத் தலை ஏற்படுத்தி யுள் ளது.

ஒரு முஸ்லிம் குடிமகனுக்கு நான்கு மனைவியர் இருந்தால் அவர்கள் ஒவ்வொருவரும் நிறையப் பிள்ளைகள் பெற்றால் முஸ்லிம் களின் தொகை கூடிவிடும் என்பது அவர்கள் அச்சம்.

அதே வேளையில் சிங்களவர்கள் நிறையப் பெண்களைத் திருமணம் செய்யச் சட்டமும் இடம்கொடுக்காது. நிறையப் பிள்ளைகளைப் பெற்று வளர்க்கப் பொருளாதாரமும் இடம் கொடுக்காது. எனவே சிங்களவர்கள் மத்தியில் அளவோடு பிள்ளைகளைப் பெற்று வாழும் ஓர் இயல்பான குடும்பக்கட்டுப்பாடு நிலவி வருகிறது.

அதன் காரணமாக சிங்களவர் களின் பெரும்பான்மையைத் தக்க வைக்க அவர்கள் கண்டுபிடித்த ஒரே வழி சரியா சட்டத்துக்கு எதிராகப் போர் தொடுப்பது தான்.

வடக்குக் கிழக்கு மக்கள் இயல் பாகவே குடும்பக் கட்டுப்பாட்டு முறைகளைப் பேணி வருகின்றனர். ஏனெனில் அவர்கள் வீட்டில் ஒருவர் உழைத் தாலும் இருவர் உழைத் தாலும் அவர்களின் தேவை கள் அதிகமாகவே உள்ளன. குறிப்பாகத் தங்களுக்கென ஒரு காணி, வீடு, தொலைக் காட்சி, கணினி போன்ற நவீன தேவைகள், பிள்ளைகளின் கல்வி என பெரும் பணத் தேவை அவர்களுக்கு உண்டு. எனவே பெரும் பாலானவர்கள் "ஆசைக்கு ஒரு ஆணும் ஆஸ்திக்கு ஒரு பெண்ணும்" என்ற அளவிலேயே வாழ்ந்து வருகின்றனர்.

ஆனால் மலையக மக்களின் நிலை வேறு. அவர்களுக்கு அதிகம் குழந்தைகள் பிறந் தாலும், ஆரம்பத்தில் சிறிது கஷ்டமாகவே இருக்கும். ஒரு குறிப்பிட்ட வயது வந்ததும் அவர்களும் வேலைக்குப் போவதால் பிள்ளை கள் பெற்றோர்களுக்கு சுமையாக இருப்பதில்லை. அது மட்டுமன்றி அவர்கள் குறைந்த தேவைகளுடனேயே வாழவும் பழகிவிட்டனர். எனவே அவர்கள் குடும்பக் கட்டுப்பாடு பற்றி அதிகம் சிந்திப்பதில்லை.

எனவே, எங்கே இவர்களின் தொகை அதிகரித்து விடுமோ என்ற அச்சத்தில் தொண்டு நிறுவனங்கள் என்ற பேரில் அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலம் ஏமாற்றியும், பலவந்தமாகவும் கருத்தடை சிகிச்சைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ஆனால் முஸ்லீம்களிடம் இவை எதுவுமே செல்லுபடியாகாததால் இப்போது சரியாச் சட்டத்துடன் மோதப் புறப்பட்டு விட்டனர். ஏற்கனவே முஸ்லிம் பெண்கள் அவர்களின் கலாசார உடையான 'பர்தா' அணியக்கூடாது எனப் பிரச்சினை எழுப்பப்பட்டுச் சில வன்முறைச் சம்பவங்களும் இடம்பெற்றன.

அண்மையில் மியன்மாரின் முஸ்லிம் களுக்கு எதிராக இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராக நாடு பரந்த அளவில் போராட்டங்கள் இடம்பெற்றன. கண்டனங்களும் எழுந்தன.

ஆனால் முஸ்லிம்களின் கலாசாரத் தனித்துவத்தைச் சிதைக்கும் வகையில் சிங்கள இன வெறியர்கள் மேற் கொள்ளும் முறையற்ற நடவடிக்கைகளுக்கு எதிராக ஏன் முஸ்லிம் தலைமைகள் தமது வலிமையான எதிர்ப்பைத் தெரிவிக்க முன் வருவதில்லை என்பதுதான் கேள்விக்குரிய விடயமாகும்.

சரியாச் சட்டத்தை நீக்கி விட்டு முஸ்லிம் களை பொதுவான சட்டத்தின் கீழ் கொண்டு வருவது முஸ்லிம் கலாசார உடைகளை எதிர்ப்பது போன்ற விடயங்கள் முஸ்லிம் மக்களின் தனித்துவத்தைச் சிதைக்க முயலும் இன அழிப்பு நடவடிக்கைகளாகும்.

இவை பற்றி முஸ்லிம் மக்கள் விழிப்பாக இருக்கத் தவறினால் எதிர்காலத்தில் பெரும் ஆபத்துக்களுக்கு முகம் கொடுக்க வேண்டி வரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈராக்கின் எல்லாப் பகுதிகளிலும் ஐ.எஸ். பயங்கரவாதிகள், கிறிஸ்தவர்களையும் முஸ்லிம்கள் அல்லாத பிற மதத்தவரையும் குறிவைத்துக் கொல்கின்றனர். கிறிஸ்தவர்கள் அதிக எண்ணிக்கையில் வசித்த நகரம் இப்போது வெறிச்சோடியிருக்கிறது.

ஐ.எஸ்.ஸுக்கு அஞ்சி அவர்கள் ஏற்கனவே அந்த ஊரைக் காலிசெய்துவிட்டு ஓடிவிட்டனர்.

யஜீதுகள் (Yazidis) தாக்கப்படுவதை ஐ.நா.வின் பாதுகாப்பு கவுன்சில் கடுமையாகக் கண்டித் திருக்கிறது. இதற்குக் காரணமானவர்கள், மனித குலத்துக்கு எதிரான குற்றங் களுக்காக நீதியின்முன் நிறுத்தப்பட்டு, கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள் என்று எச்சரித்திருக்கிறது.

உலகில் மொத்தம் 7 லட்சம் யஜீதுகள் (Yazidis) வாழ்கிறார்கள். அவர்களில் பெரும்பாலானவர்கள் வடக்கு ஈராக்கில் சிஞ்சார் மலைப் பிரதேசத்திலும் அதைச் சுற்றியுள்ள நகரங்களிலும் வசிக்கின்றனர் என்று ஒரு கணக்கெடுப்பு தெரிவிக்கிறது.

வரலாற்று ரீதியாகவே இவர்களை மற்றவர்கள் தவறாகத்தான் புரிந்துகொண்டுள்ளனர். யஜீதுகள் இனரீதியாகப் பார்க்கும்போது குர்துகள்.

மற்றவர்களால் கடுமையாக ஒடுக்கப்பட்டும் படுகொலை செய்யப்பட்டும்கூட இந்த மக்கள் தங்களுடைய மதநம்பிக்கையைவிட மறுக்கின்றனர்.

அத்துடன் வேற்று மதங்களுக்கு மாறவும் மறுக்கின்றனர். எல்லாவற் றையும்விட முக்கியம் இவர்கள் தங் களுடைய மதத்துக்கு மற்றவர்கள் மதம் மாறுவதையும் விரும்புவதுமில்லை, ஆதரிப்பதுமில்லை. அதைவிட முக்கி யம், இந்த இனத்தைச் சேர்ந்தவர்கள் பிறருடன் திருமண உறவையும் வைத்துக்கொள்வதில்லை.

எனவே, இவர்கள் அழிக்கப்பட்டால் இந்த இனம் கிளைவிடுவதற்கோ வளர்வதற்கோ வாய்ப்பே இல்லை.

11ஆம் நூற்றாண்டில் உமையத் ஷேக் என்பவர்தான் இதை உருவாக்கினார். இந்த மதமானது யூத மதம், இஸ்லாமிய மதம், கிறிஸ்தவ மதம், நெருப்பைத் தெய்வமாக வழிபடும் ஜொராஸ்டிரிய மதம் ஆகியவற்றிலிருந்து ஒவ்வொரு அம்சத்தையும் எடுத்துக்கொண்டது.

கிறிஸ்தவர்களுக்கு இருப்பதைப் போல இவர்களுக்கு ஞானஸ்நானம் உண்டு. இஸ்லாமியர்களைப் போல விருத்த சேதனம் உண்டு.




ஜொராஸ்டிரியர்களைப் போல தீ வழிபாடு உண்டு.

ஆனால், இவர்கள் ஆபிரகாமை ஏற்றுக்கொள்ளாதவர்கள்.

இவர்கள் மாலிக் டவ்வூஸ் என்ற மயில் தேவதையை வழிபடுவதுதான் மற்ற மதத்தினரால் சகித்துக்கொள்ளவே முடியவில்லை. மயில் தேவதையைக் குத்துவிளக்கில் பொறித்து வைத்துக்கொள்வது இவர்கள் வழக்கம்.

உருவ வழிபாடு தடை செய்யப்பட்டிருக்கும்போது, மயில் தேவதை உருவம் எதற்கு என்பதுதான் பெரும்பாலானவர்களின் கேள்வி.



மொத்தம் ஏழு தேவதைகள் என்றும், அதில் தலையாய தேவதை இந்த மாலிக் டவ்வூஸ் என்றும், பிற தேவதைகள் அனைத்தும் அதற்கும் கீழே என்பதுதான் யஜீதுகளின் (Yazidis) நம்பிக்கை.

சாத் தானைக் கடவுள் சபித்து, சொர்க்கத் திலிருந்து பூமிக்கு விரட்டியதாகப் புராணக் கதைகள் உண்டு. 18, 19ஆம் நூற்றாண்டுகளில் ஆட்டோமான் சாம்ராஜ்யத்தின்போதும் யஜீதுகளுக்கு (Yazidis) எதிராக 72 முறை படுகொலைகள் நடந்திருக்கிறது.

இந்த நிலையில், எங்களைக் கொல்லாதீர்கள், காப்பாற்றுங்கள் என்று யஜீது இனத்தைச் சேர்ந்த வியான் டாகில் என்ற பெண் உறுப்பினர் ஈராக்கிய நாடாளுமன்றத்தில் கதறி அழுதார்.

ஈராக்கிய அரசும் சர்வதேச சமூகமும் தங்களைக் காக்க வேண்டும் என்று யஜீதுகள் வேண்டுகோள் விடுத்தபடி இருக்கின்றனர்.

சிரியாவில் அரசுக்கு எதிராக போரில் ஈடுபட்டுள்ள ஐ.எஸ். அமைப்பு தங்களிடம் சுமார் கிட்டத்தட்ட 1,878 பேரை சுட்டுக் கொன்று மரண தண்டனையை நிறைவேற்றியுள்ளது.

இதில் பெரும்பாலானவர்கள் பொதுமக்கள். பிரிட்டனைச் சேர்ந்த சிரியா மனித உரிமை கண்காணிப்பு அமைப்பு இத்தகவலை வெளியிட்டுள்ளது.

இஸ்லாமிய சட்டப்படி அரசு அமைக்கும் நோக்கத்துடன் ஐ.எஸ். அமைப்பு சிரியாவில் அரசுக்கு எதிராக போரில் ஈடுபட்டது; ஈடுபட்டு வருகிறது.

ஈராக் மற்றும் சிரியாவில் பெரும்பகுதியை இந்த அமைப்பு கைப்பற்றியுள்ளது.

சிரியா, ஈராக் இராணுவத்தினர் மற்றும் குர்திஸ் படையினருடன் ஐ.எஸ். போரிட்டு வருகின்றது.

பிற நாடுகளின் படையும் ஐ.எஸ்.ஸுக்கு எதிராகக் களமிறங்கியுள்ளன. ஏன் ஈரான் கூட ஐ.எஸ்.ஸுக்கு எதிராகத்தான் பேசிக்கொண்டிருக்கிறது.

ஐ.எஸ். அமைப்பு தங்கள் கட்டுப்பாட்டி லுள்ள பகுதிகளில் இஸ்லாமிய சட்டத்தை மீறியவர்களுக்கு, பொது இடத்தில் தலை யைத் துண்டித்துக் கொலை செய்தல், கல்லால் அடித்துக் கொலை செய்தல் போன்ற தண்டனைகளை ஏராளமான வர்களுக்கு வழங்கியுள்ளது.

மேலும், தங்களிடம் பிடிபட்ட எதிரி இராணுவத்தினர், சமூக ஆர்வலர்கள், செய்தியாளர்கள் ஆகியோரை சுட்டுக் கொலை செய்யும் வீடியோவையும் ஐ.எஸ். அமைப்பு வெளியிட்டுள்ளது.

தங்களிடம் பிடிபட்டவர்கள், எதிரிப்படையைச் சேர்ந்தவர்கள் எனச் சந்தேகிப்பவர்களை கும்பலாகசுட்டுக் கொலை செய்யும் புகைப்படத்தையும் ஐ.எஸ். வெளியிட்டுள்ளது.

இதையெல்லாம் செய்வதற்கு ஒரு துணிவு வேண்டும். அதையும் படம் பிடித்து வெளியிடுகிறது என்றால் அவர் களின் மன நிலை நிச்சயமாக சாதாரண மக்களுடையதை ஒத்ததாக இருக்க வாய்ப்பே இல்லை.

அரசின் தாக்குதல்களால் வெறுத்துப் போன பொது மக்களில் பலரும் ஐ.எஸ்.அமைப்பில் சேர்கிறார்கள்.

'என் அண்ணனைக் கொன்ற இந்த அரசை சும்மா விடமாட்டேன்"

என்பதுபோல தனிப்பட்ட பகைமைக் காரணங்களை தனக்கெதிராக ஏராளமாக உருவாக்கி வருகிறது சிரியா அரசு.

அமெரிக்காவில் கொலாரடோ பகுதியின் டென்வர் நகரில் சமீபத்தில் நடந்துள்ள ஒரு நிகழ்ச்சி அதிர்ச்சிகரமானது.

15லிருந்து 17 வயது கொண்ட மூன்று மாணவி கள் அமெரிக்காவிலிருந்து சிரியாவுக்குச் செல்ல முடிவெடுத்து கொலாரடோ விமான நிலையத்தை அடைந்துள்ளனர்.

பள்ளியிலிருந்து இவர்கள் வீடு திரும்பாததால் காவல்துறையிடம் பெற்றோர்கள் புகார் செய்தனர். தேடுதலில் அவர்களைக் கண்டுபிடித்த காவல்துறையினர்

'எதற்காக வீட்டுக்குத் தெரியாமல் கிளம்பினீர்கள்? எங்கே செல்வதாகத் திட்டம்?" என்று கேட்க, சிறிதும் தயக்கமில்லாமல் வந்த விடை இது:

'சிரியாவிலுள்ள ஐ.எஸ்.இயக்கத்தில் சேர்ந்து சிரியாவின் ஆட்சியை கீழே இறக்கச் செல்கிறோம்".

காவல்துறை அவர்களை மீண்டும் வீட்டுக்கு அனுப்பியது வேறு விஷயம்.

சிரியாவின் ஆட்சியை ஓரளவுக்கு மேல் ஐ.நா.வால் கண்டிக்க முடியவில்லை.

காரணம் பொதுச் சபையில் சிரியாவுக்கு எதிராகக் கொண்டுவரும் தீர்மானங்களை சீனாவும், ரஷ்யாவும் வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி தடுத்து விடுகின்றன.

ஈரானும், லெபனானும் சிரியா அரசை ஆதரிக்கின்றன.

மொத்தத்தில், சிரியா - ஐ.எஸ். போர் என்பது உண்மையில் பலவித மறைமுகப் போர்களின் திரைபோலவே காட்சியளிக்கிறது.

அமெரிக்காவும், ரஷ்யாவும் கூட இதன் மூலம் தங்கள் பலத்தை சோதனை செய்து கொள்கின்றன.

அமெரிக்கா எதற்காக சிரியாவின் உள்நாட்டுப் போரில் தலையிட வேண்டும்?

'வழக்கம்போல அது தன் பெரியண்ணன் தோரணையை காட்டுகிறது" என்று மட்டுமே முடிவெடுக்க முடியாது.

வேறு பல காரணங்களும் உள்ளன.

(தொடரும்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் விரியும் பண்பாட்டுப் போர்

- அக்கினிக்குமரன்

வடக்கு கிழக்குப் பகுதி கடந்த 30 வருடங்களாக பெரும் போருக்கு முகம் கொடுத்து வந்தது. இந்தப் போர் காரணமாக இலட்சக்கணக்கான உயிரிழப்புக்கள் உட்பட நாம் ஏராளமான அவலங்களை எதிர்கொண்ட போதிலும் கூட எமது மொழி, பண்பாடு, பொருளாதாரம்,வாழிடம் என்பவற்றைக் காக்கும் புனிதமான இலட்சியத்துடனேயே இந்தப் போர் இடம்பெற்றது.

2009 ஆண்டு மே மாதத்துடன் ஆயுதப்போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு விட்டது என்பது உண்மை தான். ஆனால் இன அழிப்பை நோக்கிய ஒரு மௌன யுத்தம் பல முனைகளிலும் ஆரம்பிக்கப்பட்டு விட்டது. எமது மொழியையும், நில உரிமையையும், பொருளாதாரத்தையும், பண்பாட்டையும் அழித்து எமது தேசியத் தனித்துவத்தை இல்லாமல் செய்யும் வகையில் போர் ஒன்று விரிக்கப்பட்டுள்ளது.

அரச கருமங்களில் எமது மொழி பாவிக்கப்படுவதற்கு பலவித இடையூறுகள் ஏற்படுத்தப்படுகின்றன. அரச பெயர்ப்பலகைகளில் எமது மொழி சிதைக்கப்படுகிறது. தொலைக்காட்சிகளி




லும் சில வர்த்தக காணொலிகளிலும், நல்ல தமிழ் எது? கொல்லப்படும் தமிழ் எதுவெனத் தெரியாத நிலை உருவாகி விட்டது. எமது பாரம்பரிய நிலங்கள் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள் ளன. எமது விவசாய,மீன்பிடி மையங் களைப் படையினர் கைப்பற்றி வைத் திருப்பதன் மூலம் எமது கொருளாதார வளத்தைச் சீர் குலைத்து வருகின்றனர்.

இவற்றுக்கு மேலதிகமாக இன அழிப்பின் இன்னொரு வடிவமான எமது பண்பாட்டின் மீதான போர் தொடுக்கப்பட்டுள்ளது. இந்தப் போரின் பிரதான" அம்சமாக இளைஞர்களே இலக்கு வைக்கப்படுகின்றனர். இளவயதுக்குரிய பலவீனங்களை அடிப்படையாக வைத்து, அவர்கள் மேல் சீரழிவுப் பழக்க வழக்கங்கள் திணிக்கப்படுகின்றன. அவற்றில் மது ,புகை,பாலியல் குற்றங்கள் சந்திச் சண்டித்தனம், இரத்தப்பலி கேட்கும் வன்முறைகள் என்பன முக்கியமானவையாகும்.

அண்மையில் "ஆர்டிக்" என அழைக்கப்படும் போதைப் பொருள்கள் பாவனை மற்றும் புகைத்தல் என்பனவற்றுக்கு எதிரான ஒரு தொண்டு நிறுவனம் வெளியிட்ட ஆய்வறிக்கையில், வடக்கில் போர் முடிந்த பின்பு சில வர்த்தக நிறுவனங்களால் திட்டமிட்ட வகையில் போதைப் புகைப்பழக்க வழக்கங்கள் பரப்பப்படுகின்றன எனத் தெரிவித்திருந்தது. இவற்றை மேற்கொள்ளவதற்கு களச் சூழலை ஏற்படுத்தும் வகையில் அவை மேற்கொண்ட பொது வேலைத்திட்டங்களையும் அந்த ஆய்வு வெளிப்படுத்தியுள்ளது.

இலங்கையில் முக்கிய சிகரட் உற்பத்தி நிறுவனம் ஒன்று மாங்குளம் பொலிஸ் நிலையம் உட்பட வடக்கில் இரு பொலிஸ் நிலையங்களை அமைக்க நிதி உதவி வழங்கியுள்ளது. மேலும் இந்த நிறுவனம் அரச சார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து சில வீட்டுத் திட்டங்களையும் அமைத்துக் கொடுத்துள்ளன. மக்கள் மத்தியில் தமது உற்பத்திகளைப் பரப்பவும், அதற்குப் பொலிஸாரால் ஏற்படக்கூடிய இடையூறுகளைத் தடுக்கவும் இத்தகைய பல மறைமுக வழிகள் கையாளப்பட்டு வருகின்றன.

மேலும் அந்த ஆய்வறிக்கையில் போருக்குப் பின்னரான காலப்பகுதியில் தென்னிலங்கையில் மதுபானப் பாவனையில் பெரும் மாற்றம் ஏற்படாத போதிலும், புகைப்பொருள்கள் பாவனையில் பெரும் வீழ்ச்சி



ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஆனால் வட பகுதியில் மதுப்பாவனை, சிகரட் பாவனை என்பன பல மடங்காக அதிகரித்திருப்பது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது நாம் முக்கியமாக கவனத்தில் எடுக்க வேண்டிய விடயம். போரின் பின்பு வடக்கில் இப்படியான சீரழிவுகள் இளைஞர் மத்தியில் திட்டமிட்ட வகையில் பரப்பப்படுகின்றன என்பது ஊர்ஜிதம் ஆகிறது.

1996 இல் யாழ். குடா நாடு இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டதை அடுத்து, பல்கலைக்கழக மாணவர்களை இலக்கு வைத்து அந்தப் பகுதியில் போதை வஸ்து பாவனை ,ஆபாச க செட்டுக்கள் பரப்பல் போன்ற நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் எனக் கருதப்பட்ட சிலரும் துணை இராணுவக் குழுவாகச் செயற்பட்ட ஒரு அரசாங்க ஆதரவுக் குழுவே இந்தத் தீய முயற்சியில் இறக்கப்பட்டனர். எனினும் அந்தப் பகுதி விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இல்லாத போதும் அவர்களின் இரகசியக் குழுக்கள் மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாகவும், மாணவர் அமைப்புக்களின் விழிப்புடனான செயற்பாடுகள் காரணமாக அந்த முயற்சிகள் முளையிலேயே கிள்ளி எறியப்பட்டு விட்டன.

ஆனால் போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட பின்பு நடவடிக்கைகள் புதிய வீச்சுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஏற்கனவே துணை இராணுவக் குழுக்களாகச் செயற்பட்டு வந்தவர்கள் மீண்டும் அம்முயற்சிகளில் களமிறக்கப்பட்டுள்ளனர். அவர்கள் குழுவாக கூடி மதுபான விற்பனை நிலையங்களுக்கு முன்பும், பொது இடங்களிலும் மது போதையில் அட்டகாசம் போடுவதையும்,மோட்டார் சைக்கிள்களில் வித்தைகள் காட்டி பாதசாரிகளையும் பயணம் செய்பவர்களையும் அச்சுறுத்துவதையும் ஒரு பொழுது போக்காகவும் கொண்டு செயற்பட்டு வருகின்றனர். அதனை அறிந்து சில இளைஞர்களும் அப்படியான சேட்டைகளில் இறங்கும் அவல நிலையும் நிலவுகிறது.

இன்னொரு புறம் பாடசாலைச் சுற்றாடல்களில் குளிர்பானம் விற்பவர் போலவும், சிறு கொறிப்புப் பண்டங்கள் விற்பவர்கள் போலவும் தென்னிலங்கையிலிருந்து வருபவர்கள் மாணவர்களுக்கு போதைவஸ்து விற்கும் முயற்சிகளும் மேற்கொண்டு வருகின்றனர். கடைகளில் போதைப்பாக்கு விற்கும் காரியங்களும் இடம்பெற்று வருகின்றன.

அண்மையில் வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் வடபகுதியில் போதைப்பழக்கம், பாலியல் வன்முறைகள், ஒழுக்கக் கேடுகள் என்பன திட்டமிட்ட வகையில் இளைஞர்களிடம் பரப்பப்படுகின்றன எனவும் , இளைஞர்களின் புரட்சிகரச் சிந்தனையை மழுங்கடித்து அவர்களை வெறும் இயந்திரங்களாக மாற்றும் முகமாகவே இத்தகைய முறைகேடுகள் பரப்பப்படுகின்றன எனவும் தெரிவித்திருந்தார்.

அவர் எடுத்துரைத்த விடயம் நூற்றுக்கு நூறு வீதம் உண்மையாகும். அநீதிகளையும், அக்கிரமங்களையும் கண்டு கொதிப்பதும் அவற்றுக்கு எதிராகப் போராட்டங்களில் இறங்குவதும் இளைஞர்களின் இயல்பான தன்மையாகும். எனவே ஒடுக்கு முறையாளர்கள் எப்போதுமே இளைஞர்கள் அநீதிகளுக்கு எதிராகப் போராடுவதை விரும்புவதில்லை. அதனால் இளைஞர்களை திட்டமிட்டு தீய வழிகளில் இறங்குவதையும் அவர்களின் சிந்தனையைத் திசைதிருப்பி, மழுங்கடித்து வெறும் உல்லாசப் பிரியர்களாகவும் சமுதாயத்தைப் பற்றியும், இனத்தைப்பற்றியும் சிந்திக்காதவர்களாகவும் மாற்றும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவற்றின் பின்னால் இன ஒடுக்குமுறையாளர்களின் வலிய கரங்கள் இருக்கின்றன என்பதையும், கடந்த காலத்தில் இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் என்று கருதப்பட்டவர்களுடன் இணைந்து எமது மக்களைக் கொன்றும், காணாமல் போகவும் செய்த கூட்டம் இப்போது போதைப்பொருள்கள் மூலமும், கலாச்சார சீரழிவு மூலமும் அழிக்கும் வேலையில் இறங்கி விட்டன.

எனவே எமது இனத்தின் மீது தொடுக்கப்படும் பண்பாட்டுப் போர் பற்றி எமது இளைஞர்களும் சமூகமும் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். ***


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர் ஒளி
வாராந்த சஞ்சிகை


sudarolijaffna@gmail.com
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 567 7609


## சமூகக் கொடுமைகளை ஒழிக்க அரச அலகுகளை நம்பியிராதீர்

மோட்டார் சைக்கிளில் வீதியால் பயணித்துக் கொண்டிருந்த இரண்டு பெண்களை வழிமறித்த இரண்டு இளைஞர்கள், தெரிந்தவர்கள் போன்று நடித்து - கதை கொடுத்து - பெண்களில் ஒரு வருடைய சங்கிலியை மட்டுமன்றி தாலிக் கொடியையும் அறுத்துக் கொண்டு மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றனர்.

பெண்கள் இருவரும் திருமண நிகழ்வு ஒன்றுக்கு சென்றுவிட்டு வீடு திரும்பும் வேளையில், மானிப்பாய் பொலிஸ் பிரிவைச் சேர்ந்த சுதுமலை யில் குறிப்பிட்ட சம்பவம் பட்டப்பகலில் நடை பெற்றது.

அதற்குச் சமாந்திரமான நகை அறுப்பு நவாலிப் பகுதியிலும் நடைபெற்றதாக தகவல்கள் வெளி வந்தன.

மேற்போந்த சம்பவங்கள் இரண்டும் கடந்த இரண்டு நாள்களில் அடுத்தடுத்து நடைபெற்றன.

யாழ்ப்பாண மாவட்டத்தின் பல பகுதிகளிலும் பிரதேசங்களிலும் வன்செயல்கள் பலவகையறாக் களாகப் பல்கிப் பெருகுவதனையே மேற்போந்த சம்பவங்கள் தொட்டுக்காட்டுகின்றன. இவற்றை சினிமா வழிவந்த கெடுதல்கள் மட்டும் என்று கருது வது தப்பு.

சட்டம் ஒழுங்கைப் பேணவேண்டிய (அரச) அலகு கள், கைகட்டி வாய் பொத்தி , அவை வளர உள் ளார்ந்து தூண்டுதல் அளிக்கின்றனவோ என்ற சந்தேகத்தையே மேலுயர்த்துகிறது.

அதனைத் தடுக்கும் பொறுப்பை, அரசாங்கத்தின் அலகுகளில் ஒன்றான காவல்துறையினரிடம் "கையளித்துவிட்டு", எம்மத்தியில் உள்ள சமூக நலன் விரும்பிகள் கைகட்டி நின்று வெறுமனே நியாயம் பிளப்பதோடு மட்டும் நின்றுவிடலாமா?

இளைஞர்களை வன்செயல் மனோபாவம் என்ற பாழ்கிணற்றில் இருந்து மீட்டு எடுப்பதற்கு, சமூக மட்டத்தில் அக்கறையுடன் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியது இன்றைய தேவை. பெரும் பொறுப்பும் அதுவே.

இன்னொரு புறத்தில், கணவர்களால் தாக்கப் படும் மனைவிகளின் எண்ணிக்கையும் உயர்வதா கச் சுட்டிக்காட்டப்படுகிறது. கிழக்கில் அதிவேக மாகப் பரவிவரும் கணவர்களின் இந்தக் கொடுமை வடக்கிலும் ஆங்காங்கே தலைகாட்டு கிறது. அது அதிக அளவில் தொற்றிவிடாமல் தடுக் கும் பொறுப்பு வடக்கர்களுக்கும் உண்டு.

மேற்போந்த சமூகக் கொடுமைகளை அரச அலகுகள் தனித்து நின்று ஒழிக்கும் என்று எதிர் பார்ப்பது, வெறும் பானையிலிருந்து சோறு அள்ளக் காத்திருப்பதை ஒத்ததாகும்.

அவற்றை முளையிலேயே கிள்ளி எறியும் பொறுப்பு, பெரிய அளவில் எங்கள் சமூகத்திடமே உண்டு. அதனை உடன் செய்யத் தவறின் தமிழர்கள் தாழ்ந்து போவதற்கு உடந்தையாகி, தனது தலை யில் தானே அடித்துக்கொள்ளும் பயனற்ற நிலையே மேலெழும்.

- பிரமன்

# குற்றங்களும் குறட்டையும்

வாகனங்களில் பயணிக்கும் போது சில வளைவுகளில் 'விபத்து அதிகம் நிகழும் பகுதி' என்ற எச்சரிக்கைப் பலகைகளை அடிக்கடி பார்க்க முடியும். இதற்கு முன்னர் ஏராளமான விபத்துகள் குறித்த பகுதியில் நடந் திருக்கும். அதனை அடிப்படையாகக் கொண்டு இத்தகைய எச்சரிக்கைப் பலகைகள் நடப்பதுவதுண்டு. ஆனால் வெறும் பலகைகளை மட்டும் நட்டுவிடுவதால் மாத்திரம் அந்தப் பகுதியில் விபத்துக்களைக் குறைக்கலாம் என்று பொலிஸாரும், அரசும் நினைக்கின்றன போலும்! உண்மையில் அவ்வாறான அறிவிப் புப்பலகைகள் மூலம் ஒரு எச்சரிக் கையை வழங்கலாமே தவிர, குறித்த



பகுதியில் விபத்துக்கள் எதிர்காலத்தில் ஏற்படாமல் தவிர்ப்பதற்கு எச்சரிக்கைப் பலகைகள் மட்டும் போதுமானவை யல்ல. விபத்துகள் அதிகம் நிகழ்பவை என அடையாளப் படுத்தப்படும் பகுதிகளில் பொலிஸார் தொடர்ச்சியா கக் கடமையில் ஈடுபடுத்தப்படுவதன் மூலம் அந்தப் பகுதிகளில் பயணிக்கும் வாகனச் சாரதிகள் தமது வேகத்தை குறைக்க முனைவர். ஏனெனில் அறிவிப் புப்பலகை வெறும் எச்சரிக்கையை மட்டும்தான் கொடுக்குமே தவிர எவரையும் கைதுசெய்யவோ தண்டப்பணம் அறவிடவோ, குறித்த பலகையால் முடியாதுதானே.

ஆனால் பொலிஸார் அவ்வாறில்லை. விதிகளை மீறுகிறார்களோ அல்லது வேகமாக வாகனத்தைச் செலுத்துகிறார் களோ அல்லது ஒருவிபத்தை ஏற்படுத் தக்கூடிய வகையில் செயற்படுகிறார் களோ அவர்களையெல்லாம் கைது செய்ய அல்லது தண்டப்பணம் அறவிடும் அதிகாரம் அவர்களுக்குண்டு. அதனால்தான் பொலிஸாரைக் கண் டாலே மின்னலாய்ப்பறக்கும் வாகனங்கள் சட்டென நத்தையாக மாறி ஊர்ந்து செல்லத் தொடங்கிவிடும்.

குறித்த விபத்துப்பலகைகளைப் போல அண்மையில் ஒரு பட்டியலை யாழ். செயலகம் விடுத்துள்ளது. அதில் யாழ்மாவட்டத்தில் எங்கெங்கெல்லாம் வன்முறைகளும், பாலியல் தொந்தரவுகளும் சட்டவிரோத போதைப்பொருள் பாவனை/ விற்பனை என்பன அதிகரித்துள்ளன என்று அந்தப்பட்டியலில் அடையாளப் படுத்தப்பட்டுள்ளது. ஏற்கனவே அந்தப் பட்டியலில் உள்ள இடங்கள் இப்படிப்பட்டவைதான் என்பது மக்களுக்கும் தெரியும். ஆனால் அது வெறும் வாய்வழிச் செய்தியாகவே இருந்தது. இப்போது அதனை மாவட்ட செயலகம் உத்தியோகபூர்வமாக உறுதிப்படுத்திவிட்டது. விபத்துப்பகுதி அவதானம் என்ற எச்சரிக்கைப் பலகைகளைப் போன்று குறித்த பகுதிகளிலும் அவதானமாக இருக்குமாறு குறித்த பட்டியல் வேண்டி நிற்கிறது.

மாவட்ட செயலகம் விடுத்துள்ள பட்டியல் குறித்த பகுதிகளில் கடந்த காலங்களில் இடம்பெற்ற சம்பவங்களையும் அதன் பின்னரான நிகழ்வுகளையும் அலசி ஆராய்ந்த பின்னரே வெளியிடப்பட்டிருக்கிறது. குறித்த இடங்களைத் தவிர இப்படியான சட்டவிரோதச் செயற்பாடுகள், கலாசார பிறழ்வான நடவடிக்கைகள் இடம்பெறுகின்ற இன்னும் பல பகுதிகள் பொதுமக்களுக்குத் தெரியும். ஆனால் தெரிந்தும் என்ன பயன்? அவர்கள் வெறும் பொதுமக்களே தவிர குறித்த சட்டவிரோ நடவடிக்கைளை த் தட்டிக்கேட்கும் சினிமா நாயகர்கள் அல்லவே.

எனவே அவர்கள் கண்முன்னே நிகழும் அநீதிகளை கண்டும் காணாதவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வெறும் பலகைகளை மட்டும் நட்டுவிடுவதால் மாத்திரம் அந்தப் பகுதியில் விபத்துக்களைக் குறைக்கலாம் என்று பொலிஸாரும், அரசும் நினைக்கின்றனர் போலும். உண்மையில் அவ்வாறான அறிவிப்புப் பலகைகள் மூலம் ஒரு எச்சரிக்கையை வழங்கலாமே தவிர, குறித்த பகுதியில் விபத்துக்கள் எதிர்காலத்தில் ஏற்படாமல் தவிர்ப்பதற்கு எச்சரிக்கைப் பலகைகள் மட்டும் போதுமானவையல்ல. விபத்துகள் அதிகம் நிகழ்பவை என அடையாளப் படுத்தப்படும் பகுதிகளில் பொலிஸாரைத் தொடர்ச்சியாகக் கடமையில் ஈடுபடுத்தப்படுவதன் மூலம் அந்தப் பகுதிகளில் பயணிக்கும் வாகனச் சாரதிகள் தமது வேகத்தை குறைக்க முனைவர். ஏனெனில் அறிவிப்புப்பலகை வெறும் எச்சரிக்கையை மட்டும்தான் கொடுக்குமே தவிர எவரையும் கைதுசெய்யவோ தண்டப்பணம் அறவிடவோ, குறித்த பலகையால் முடியாது.**

போலவே நடந்து கொள்ள வேண்டியிருக்கிறது. அதையும் மீறி அநியாயத்தைத் தட்டிக் கேட்க முடியாவிட்டாலும் இலேசான தொனியில் எதிர்ப்பை வெளியிட்டவர்களுக்குக் கூட வாள்வெட்டும், கொட்டன் அடியும்தான் வெகுமான





மாகக் கிடைத்துள்ளன. எனவே " எங்களுக்கு ஏன் வீண் வம்பு? " என்று பலர் தீக்கோழிகளைப் போல மண்ணுக்குள் தலையைப் புதைத்துக்கொண்டு நடப்பவற்றைக் கண்திறந்து பார்ப்பதையே தவிர்க்கிறார்கள். இத்தகைய சூழலில்தான் மக்களுக்கு பொலிஸாரின் தேவை வேண்டப்படுகிறது.

யாழ்மாவட்ட செயலகம் அண்மையில் வெளியிட்ட குற்றங்கள் மலிந்த இடங்களில் எங்காவது, பொலிஸாரின் தலைக்கறுப்பைக்கூட காண்பது கடினம். தமக்கு வசதியான நேரங்களில் ஒழுங்கைகளிலும் வீதி வளைவுகளிலும் ஒளிந்திருந்து வாகனங்களின் ஆவணப் பரிசோதனையைச் செய்யும் பொலிஸார் மறந்துபோய்க்கூட இத்தகைய குற்றப்பூமிகளில் பாதம் பதியவிட்டதில்லை. அந்தளவுக்கு இருக்கிறது பொலிஸாரின் துணிச்சல்.

குற்றங்கள் மலிந்த பூமியைப் பற்றிய அடையாளப்படுத்தல் பட்டியல் வெளியாகி ஒருவாரத்துக்கு மேலாகிவிட்டது. ஆனால் இன்னமும் குறித்த பட்டியலில் உள்ள எந்த ஒரு இடத்திலும் பொலிஸார் குறித்த சட்டவிரோத நடவடிக்கைகளைக் கட்டுப் படுத்த களமிறங்கியதாகத் தெரியவில்லை. வெறுமனே இந்த இந்தப் பகுதிகளில்தான் குற்றங்கள் நிரம்பிவழிகின்றன என்று சொல்லிவிட்டு வாளாவிருப்பது தான் பொலிஸாரின் கடமையா? கண்முன்னே குற்றங்கள் கட்டவிழ்ந்து பரவிக்கொண்டிருக்கையில், அதை வேடிக்கை பார்த்து அறிக்கையிடுவதுதான் தமது கடமையென பொலிஸார் நினைத்துவிட்டார்களோ என்னவோ தெரியவில்லை.

எப்போதுமே தமிழ் சினிமாவில் வருவதைப்போல எல்லா அசம்பாவிதங்களும் நடந்து முடிந்த பின்னர்தான் பொலிஸார் சம்பவ இடங்களுக்கு வருவது வழமை. புங்குடுதீவில் வித்தியா கூட்டு வன்புணர்வுக்குள்ளாக்கப்பட்ட பின்னர் குடாநாடெங்கும் அசம்பாவிதங்கள் நிகழத்தொடங்கியபோதுகூட பொலிஸார் வேடிக்கை பார்ப்போராகவே இருந்தனர். வேண்டுமென்றே வன்முறையை இன்னும் அதிகரிக்கச் செய்வதற்கான உத்தியாகவே இதனை தமிழ் மக்கள் நோக்குகிறார்கள். ஆரம்பத்தில் வித்தியாவின் கொலைக்காக உள்ளுணர்வால் உந்தப்பட்டவர்களே போராட்டங்களை ஆரம்பித்தார்கள் ஆனால் இந்தப் போராட்டத்தை வேறு திசையில்மாற்றி அதற்கு வன்முறை வடிவம் கொடுத்து எல்லாவற்றையும் குழப்புவதற்கு ஒருகுழு முனைந்தது. அந்தக் குழுவின் செயற்பாடுகளுகுகு இடமளிக்கும் வகையிலேயே குடாநாட்டில் ஆங்காங்கே நிகழ்ந்த சில்லறை வன்செயல்களைப் பொலிஸார் அனுமதித்தனர் என்று ஐயுற வேண்டி உள்ளது. இதனால் துணிச்சல் ஏற்பட்டு கடைசியில் நீதிமன்றத்துக்கு கல்லெறியும் அளவுக்கு வன்முறை உச்சக்கட்டத்தை எட்டியிருந்தது.

பொலிஸாரின் இத்தகைய வன்முறை வளர்ப்பு உத்தியை அரசாங்கம் கண்டறிந்துகொண்டதால் பொறுப்பதிகாரிகள் உடனடியாகவே அப்புறப்படுத்தப்பட்டார்கள். இப்படி எல்லாம் முடிந்த பின்னர் தங்கள் கைவரிசையைக் காட்டுகின்ற பொலிஸார் வெள்ளம் வரமுன்னர் அணைகட்டுவதற்கு மாத்திரம் இன்னமும் தயங்கவே செய்கிறார்கள். 'இதுதான் அணை. இங்குதான் வெள்ளம் பெருக்கப்போகிறது" என்பதெல்லாம் நன்கு தெரிந்தும்கூட அந்த இடத்தில் அணை போடாமல், சாரதிகளிடம் எப்படிக் குற்றம் கண்டுபிடித்து தங்கள் பொக்கெற்றை வீங்கச்செய்வது என்று தூண்டில்போடுவதில்தான் பெரும்பாலான பொலிஸாரின் கடமைநேரம் கழிகிறதுபோலும்.

இல்லாவிட்டால் குற்றங்கள் மலிந்துவிட்டதாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள இடங்களில் விசேட பொலிஸ் சோதனைச்சாவடிகள் நிறுவப்பட்டிருக்க வேண்டும். அத்தோடு பொலிஸாரின் ரோந்து நடவடிக்கைகளும் கண்காணிப்புச் செயற்பாடுகளும் அந்தப் பகுதிகளில் முடுக்கிவிடப்பட்டு குறித்த குற்றங்களின் பின்னணியில் யாரெல்லாம் சூத்திரதாரிகளாக இருக்கின்றார்கள் என்ற உண்மை கண்டறியப்பட்டிருக்க வேண்டும். அப்படி சூத்திரதாரிகளை இனம் கண்டுவிட்டால் குற்றங்களைக் குறைப்பது இலகுவாகிவிடும். ஏனெனில் சூத்திரக்கயிறு அசையும் மட்டுந்தான் பொம்மைகளின் இயக்கம் இருக்கும். சூத்திரதாரிகள் மடக்கப்பட்டுவிட்டால் அவர்களின் ஏவலாளிகள் தம்பாட்டிலேயே மூலையில் முடங்கிவிடுவார்கள். பின்னர் குறித்த பகுதிகளும் ஏனைய பகுதிகளைப் போல இயல்பான தன்மையைப் பெற்றுவிடும். இதைத்தான் பொலிஸார்செய்ய வேண்டும். ஆனால் அதனைத் தவிர்த்து இந்தப் பகுதிகளில் குற்றம் பெருகி இருப்பதால் வேறுவழியில் செல்லுங்கள் என்பதுபோல நடந்து கொள்வது பொலிஸாருக்கு உகந்த ஒன்றல்ல. சிலவேளைகளில் இலங்கைப் பொலிஸார் எம்.ஜி.ஆரின் ரசிகர்களாக இருப்பார்களோ தெரியவில்லை. ஏனென்றால் ஒரு படத்தில் "திருடனாய்ப்பார்த்துத் திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது" என்று எம்.ஜி.ஆர் பாடியிருக்கின்றார்.

ஆகவே என்னதான் நாங்கள் பிடித்து உதைத்து தண்டனை வாங்கிக்கொடுத்தாலும் குற்றவாளிகள் தாமாகப் பிழையை உணர்ந்தால்தானே திருந்துவார்கள் என்று நினைத்து, குற்றவளிகள் திருந்தும் வரை காத்திருந்து தங்களுடைய 'எம்.ஜி.ஆர் விசுவாசத்தை' பொலிஸார் வெளிப்படுத்துகிறார்கள் போலும்!

இனியாவது தமது பொறுப்பை உணர்ந்து பொலிஸார் குற்றங்களைக் கட்டுப்படுத்த தீவிர நடவடிக்கையில் இறங்கவேண்டும். வெறுமனே குற்றங்கள் மலிந்த பூமிகளை அடையாளப்படுத்துவது மாத்திரம் குற்றங்களைக் கட்டுப்படுத்த உதவாது. சொல்லைவிட செயலே சிறந்தது. அந்தச் செயலில் இறங்க இனியாவது பொலிஸாருக்குத் துணிவு பிறக்கட்டும்.

***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகப் புத்தகத்தில் செய்யக்கூடாத 7 தவறுகள்....!

ஒருவர் தன் புகைப்படம், முகவரி, தொழில் செய்யும் இடம் தொடர்பான விவரங்கள் போன்ற பல்வேறு விதமான சுய விவரங்களை முகப் புத்தகத்தில் (ஃபேஸ்புக்) தளத்தில் பகிர்ந்து கொள்வதால், அதை தங்கள் சுயநலத்துக்காகவோ, விளையாட்டாகவோ சில விஷமிகள் மாற்றி/திரித்து விடுவது, மற்றும் விவரங்களைக் கொண்டு




சம்பந்தப்பட்டவரை தொடர்புகொண்டு சில்மிஷங்கள் செய்வது போன்ற பல சிக்கல்களை இதன் பயனாளிகள் சந்திக்கக்கூடும்..!

இப்படி நிறையப் பிரச்சினைகள்

**ஒருவர் தன் புகைப்படம், முகவரி, தொழில் செய்யும் இடம் தொடர்பான விவரங்கள் போன்ற பல்வேறு விதமான சுய விவரங்களை முகப் புத்தகத்தில் (ஃபேஸ்புக்) தளத்தில் பகிர்ந்து கொள்வதால், அதை தங்கள் சுயநலத்துக் காகவோ, விளையாட்டாகவோ சில விஷமிகள் மாற்றி/திரித்து விடுவது, மற்றும் விவரங் களைக் கொண்டு சம்பந்தப்பட்டவரை தொடர்பு கொண்டு சில்மிஷங்கள் செய்வது போன்ற பல சிக்கல்களை இதன் பயனாளிகள் சந்திக்கக் கூடும்..!**

ஏற்படுவதற்காக, ஒட்டு மொத்தமாக முகப் புத்தகம் தளத்தை பயன்படுத்தாமல் இருந்து விடுவது நல்லது என்றோ, முகப் புத்தகத்தினால் கிடைக்கும் சில நல்ல விஷயங்களை அனுபவிக்காமல் விட்டுவிட வேண்டும் என்றோ சொல்ல முடியாது. ஆனால், முகப் புத்தகத்தைபாதுகாப்பாக எப்படி பயன்படுத்துவது என்பதை தெரிந்து கொண்டால் மட்டுமே போதுமானது! அதைப்பற்றிய சில நுணுக்கங்களே இவைகள்.

முகப்புப் புத்தகத் தளத்தை பாதுகாப்பாகப் பயன்படுத்த, தவிர்க்க வேண்டிய 7 முக்கியமான தவறுகள்/ செயல்களை பட்டியலிட்டிருக்கிறார்கள் சில வலைப்பின்னல் துறை வல்லுனர்கள்.

1. சுலபமான ஒரு கடவுச்சொல்லை பயன்படுத்துவது (Using a Weak Password) பெயர்கள், களஞ்சியத்தில் உள்ள சில சுலபமான வார்த்தைகள், அவற்றுக்கிடையில் எண்களை சேர்த்து பயன்படுத்துவது போன்றவற்றை உங்கள் கடவுச்சொல்லாகப் பயன்படுத்துவதை தவிர்த்தல் அவசியம்..! அதற்குப் பதிலாக, பெரிய மற்றும் சிறிய எழுத்துக்களுடன் (upperd and lowerdcase letters) எண்கள் மற்றும் குறியீடுகளை (symbols) கடவுச்சொல்லாக பயன்படுத்துவது மிகவும் உறுதியானது!

   ஒரு கடவுச்சொல் குறைந்தது 8 எழுத்துக்களைக் கொண்டிருத்தல் நலம். மற்றுமொரு வழி, ஒரு வார்த்தையின் நடுவில் எண்கள்/ குறியீடுகளை சேர்த்து கடவுச்சொல்லாக பயன்படுத்துவது மிகவும் சிறந்தது. உதாரணமாக, houses என்னும் வார்த்தையை hO2%usEs என்று மாற்றிப் பயன்படுத்துவது!

2. உங்களின் முழு பிறந்த திகதியை வெளிப்படையாக குறிப்பிடுவது (Leaving Your Full Birth Date in Your Profile)

   இணையத்தில் உலவும், அடையாளத் திருடர்களுக்கு (identity thieves), ஒருவரின் பிறந்த திகதி தான் முதன்மையான இலக்கு. அதைத் திருடி என்ன செய்வார்கள் என்று கேட்கிறீர்களா? உங்க பிறந்த திகதியை வைத்து, உங்களின் மேலதிக தகவல்களைச் சேகரித்து, உங்க வங்கி கணக்கு/ கடன் அட்டை கணக்கு போன்றவற்றைத் திருடக் கூடும்?

   ஐயய்யோ அப்படியா? சரி சரி, உடனே உங்கள் முகப்புப் புத்தகக் கணக்கை திறந்து, profile பக்கத்துக்கு போய், Info tab - ஐ 'கிளிக்' பண்ணி, Basic Information பகுதியில் பிறந்த திகதியை மட்டும் அல்லது மாதம் மட்டும் அல்லது பிறந்த திகதியையே குறிப்பிடாம விட்டு விடுங்க. சரியா?.

3. சுய பாதுகாப்புக் கட்டுப்பாடு வாய்ப்புகளை அலட்சியப்படுத்துவது (Overlooking Useful Privacy Controls)

   உங்கள் முகப் புத்தகப் பக்கத்தில் மற்றவங்களுக்கு தொடர்பு வழங்க நண்பர்கள் மட்டும் (only friends) நண்பர்களின் நண்பர்கள் மட்டும் (friends of friends) அல்லது நீங்கள் மட்டும் (yourself) இப்படி பல கட்டுப்பாடுகளை வைக்கலாம்.

   இந்தப் பக்கத்தில், உங்கள் படங்கள், பிறந்த திகதி, மத பார்வை மற்றும் குடும்ப விவரங்கள், இது எல்லா வற்றையும் மேற்குறிப்பிட்டபடி ஒரு வகையான கட்டுப்பாட்டுக்குள் வையுங்கள். மிக முக்கியமா, உங்க தொலைபேசி எண், முகவரி போன்ற தொடர்பு விவரங்கள மத்தவங்க பார்க்குற மாதிரி வைக்காதீங்க!

4. உங்களின் குழந்தையின் பெயரை புகைப்பட தலைப்புகளாக பயன்படுத்துவது (Posting Your Child's Name in a Caption) உங்க குழந்தைங்க பெயரை படங்களின் தலைப்புகளாகவோ, குறியீடுகளாகவோ (photo tags) பயன்படுத்துவதை தவிர்ப்பது நல்லது. வேறு யாராவது உங்க குழந்தைகளுடைய பெயரைப் பயன்படுத்தியிருந்தால், Remove Tag என்னும் தொடர்பை அழுத்தி நீக்கி விடுங்கள். இல்லை என்றால் அவர்களை நீக்கச் சொல்லுங்கள்

5. நான் வெளியூருக்குச் செல்கிறேன் என்று குறிப்பிடுவது (Mentioning That You'll Be Away From Home) அதாவது, வெளியூருக்குச் செல்வதாயிருந்தால், no one's home அப்படியான விஷயங்கள் எழுதுவதைத் தவிர்த்திடுங்கள். நீங்க திரும்பி வந்து உங்கள் சுற்றுலா எப்படி இருந்தது என்று எழுதலாம். அதேமாதிரி சுற்றுலா செல்லும் திகதியை மறந்தும் குறிப்பிடா வேண்டாம்.

6. 'கூகுள்' போன்ற தேடியந்திரங் களின் பார்வையில் இருப்பது (Letting Search Engines Find You) பரிச்சயமில்லாதவர்கள் உங்கள் முகப்புத்தகம் பக்கங்களை, 'கூகுள்' போன்ற தேடியந்திரங்கள் மூலம் அடைவதைத் தவிர்க்க, முகப்புத்தகத்தின் சுயபாதுகாப்பு பகுதிக்குள் இருக்கும் தேடுதல் பகுதியில் (Search section of Facebook's privacy controls) நண்பர்கள் மட்டும் என்பதை தேர்ந்தெடுங்கள் (select Only Friends for Facebook search results). முக்கியமாகப் பொதுத் தேடுதல் முடிவுகள் என்பதை

( 22 ஆம் பக்கம் பார்க்க)






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# செம்மரங்கள் சிந்தும் கண்ணீர்

- தி. இராசகோபாலன்
(பேராசிரியர்)



நம் தேசத்தில் மண்ணோடும், மனிதர்களோடும் வேரூன்றி நிற்பன மரங்கள். ஒரு வீடு மணக்கோலம் கொண்டிருப்பதை, வாசலிலே கட்டியிருக்கும் வாழை மரம் உணர்த்துகிறது. மற்றொரு வீடு பிணக் கோலம் கொண்டிருப்பதை மூங்கில் மரம் சுட்டுகிறது.

பிறந்த குழந்தையை மரத் தொட்டில் தாலாட்டுகிறது. மணந்த தம்பதியரை மரக் கட்டில் தாங்குகிறது. வாழ்ந்து முடிந்தவர்களைக் கால்கழிகட்டில் (பாடை) ஏந்துகிறது. எனவே, மனிதனுக்கு மரம் இயற்கை கொடுத்த வரம் எனலாம். அந்த வரத்தை வெட்டுபவனுக்கு அதுவே சாபமும் ஆகிறது.

**இலக்கணத்தால் மட்டுமே மனிதன் உயர்திணை ஆகின்றான். மரம் அஃறிணை ஆகின்றது. மற்றபடி பயன்பாட்டால், உணர்வுகளால், மரமும் உயர் திணையே. இறைவனைப் போலவே மரமும் தன்னடியை அடைந்தவர்களுக்கு அடைக்கலம் தருகிறது. சில சமயங்களில் புத்தனாகவும் ஆக்குகிறது. மனிதன் இறந்தால் பணம் கொடுத்துத் தூக்க வேண்டியிருக்கிறது. மரம் இறந்தால், பணம் கொடுத்துத் தூக்கிக் கொண்டு போகின்றனர்.**

இலக்கணத்தால் மட்டுமே மனிதன் உயர்திணை ஆகின்றான். மரம் அஃறிணை ஆகின்றது. மற்றபடி பயன்பாட்டால், உணர்வுகளால், மரமும் உயர்திணையே. இறைவனைப் போலவே மரமும் தன்னடியை அடைந்தவர்களுக்கு அடைக்கலம் தருகிறது. சில சமயங்களில் புத்தனாகவும் ஆக்குகிறது. மனிதன் இறந்தால் பணம் கொடுத்துத் தூக்க வேண்டியிருக்கிறது. மரம் இறந்தால் பணம் கொடுத்துத் தூக்கிக் கொண்டு போகின்றனர்.

தாகத்தோடு வருகின்றவர்களுக்கு தென்னை மரம் இளநீர் தருகிறது. அதனால்தான் வள்ளலார், 'கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் வகைக் கிடைத்த குளிர்தருவே தருநிழலே நிழல்கனிந்த கனியே' என மரத்தை இறைவனாக உருவகித்துப் பாடுகிறார்.

வேட்ஸ்வேத் எனும் ஆங்கிலக் கவிஞன், பள்ளத்தாக்கிலுள்ள மரங்களையும், மரங்களிலுள்ள மலர்களையும் பார்க்கிறான். பார்த்துப் பரவசப்பட்ட அவன், ஒரு தாய் மடியை நோக்கி, ஒரு குழந்தை தாவுவதுபோல், என் இதயம் மரங்களின் உச்சிக்கே தாவிவிட்டன. அந்தத் தாய் பேசுவது எனக்குக் கேட்கிறது. மிகுந்த மகிழ்ச்சியோடு நான் கேட்டுக் கொண்டேயிருக்கிறேன் - எனப் பாடுகிறான்.

மரங்கள் தம்முடைய ஒவ்வொரு பாகத்தாலும் நம்முடைய நோய்களைத் தீர்ப்பதற்குத் தயாராக இருக்கின்றன என்பதைத் திருவள்ளுவர், 'மருந்தாகித் தப்பா மரத்து அற்றால்' எனும் குறள் மூலம் புலப்படுத்துகிறார்.

மரங்களும், மலர்களும் உயர்ந்த நோக்கத்துக்காகத் தங்கள் உயிரைக் கூடத் தியாகம் செய்யத் தயாராய் இருக்கின்றன என்பதை மாக்கன்லால் சதுர்வேதி எனும் ஒரு ஹிந்திக் கவிஞன், புஷ்பிக் அபிலாஷா (மலர்களின் ஆசை) எனும் தலைப்பில் ஒரு தோட்டக்காரனோடு மலர்ந்த மலர்கள் பேசுவதாக ஒரு கவிதை தீட்டியுள்ளார்.

பல நாள்கள் நீரூட்டி வளர்க்கப்பட்ட செடிகள் பூத்தவுடன், அந்த மலர்களைப் பார்த்துத் தோட்டக்காரன்,

'உங்களைப் பறித்து நான் எங்கே கொண்டு அர்ப்பணிக்க' என்று கேட்கின்றான்.

அதற்கு மலர்க் கூட்டத்தின் தலைமை மலர்,

"ஏ! தோட்டக்காரனே, நாங்கள் தேவ கன்னியர்கள். காதலியைத் தன்வயப்படுத்துவதற்காக மார்பிலே மாலையை அணிந்து செல்லும் காதலனின் மாலைக்கு மலராகப் போக விரும்பவில்லை. தேவர்களின் தலைமுடிமேல் அமர்ந்திருக்கவும் விரும்பவில்லை. அரியணை ஏறும் அரசர்களின் கழுத்துக்கும் மாலையாக விரும்பவில்லை. மகா சக்கரவர்த்திகள் மாண்டுபோனபோது அவர்கள் மார்புக்குச் சூட்டும் மாலைக்கும் மலராக விரும்பவில்லை.

வேறு எதற்கு நாங்கள் பயன்பட வேண்டும் தெரியுமா? அடிமைப்பட்ட நாட்டின் சுதந்திரத்தை மீட்கத் தங்கள் தலையையும் தரத் தயாராக இருக்கும் வீரர்கள் நடந்து போகின்ற பாதைகளில் கொண்டுபோய் எங்களை விசிறி எறி. அவர்களின் காலுக்குக் கீழே நாங்கள் தேய்ந்து வீர மரணம் அடைய வேண்டும்" எனப் பிரகடனம் செய்ததாம்.

அப்படி வீர வரலாறு படைக்க இருக்கும் தாவரங்களை வயிற்றுப் பிழைப்புக்காகவும், மாஃபியா சுகத்துக்காகவும் வேர் பறிக்கலாமா?

அப்படிப் பெருவேட்கை கொண்டிருக்கும் தாவரங்கள் இன்றைக்கு எதற்காக வதைக்கப்படுகின்றன தெரியுமா? பாலுணர்வைத் துரிதப்படுத்தித் தூண்டுவதற்கான போதை மருந்தைத் தயாரிப்பதற்குச் செம்மரங்கள் வெட்டிக் கடத்தப் படுகின்றன.

ஜப்பானில் மிக அபூர்வமான இசைக் கருவியின் பெயர் ஸமிஷென் என்பதாகும். அந்த இசைக் கருவியைத் தயாரிப்பதற்குச் செம்மரத்தைப் போலப் பயன்படுவது வேறொன்றுமில்லையாம்.

ஐரோப்பிய நாடுகளில் வெகு அபூர்வமான வியாதிகளைத் தீர்ப்பதற்குரிய மருந்து வகைகள் நம்முடைய செம்மரத்திலிருந்துதான் தயாரிக்கிறார்களாம். இந்தக் காரணத்துக்காக செம்மரங்கள் வெட்டப்படுமானால், அவை ஆனந்தக் கண்ணீர் அல்லவா வடிக்கும்?

மரங்களுக்கு நம்மைப் போல மனமும், மனசாட்சியும் உண்டு. மேலும், சத்தியத்துக்குச் சாட்சியாகவும் மரங்கள் இருந்திருக்கின்றன. சங்க காலத்தில் தலைவன், தலைவியோடு நெருங்கிப் பழகிவிட்டு, மணம் பேசுங்காலை, அவளை எனக்குத் தெரியவே தெரியாது எனக் கைவிடுவானேயானால், அவனைக் கொண்டுபோய் ஒரு மரத்தடிக்குக் கீழே நிறுத்தி, முன்சொன்னதையே சொல்லச் சொல்வார்களாம்.




அப்படி அவன் நயவஞ்சகமாகப் பொய் சொல்லுவானேயானால், அம்மரம் கரிந்து பட்டுப்போய் அவனைக் காட்டிக் கொடுத்துவிடுமாம் (அரிபொய்த்தான் கீழிருந்த மரம்போல் கவின் வாடி என்பது பாலை பாடிய பெருங்கடுங்கோவின் பாடல் எண் 33, கலித்தொகை) மனிதர்களைக்கூட ஏமாற்ற முடிந்த ...

(20 ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிம்மசொப்பனம்-25



பொருளாதாரம் சரிந்து கொண்டிருந்தது. கிளர்ச்சிகள் வெடித்துக் கொண்டே இருந்தன. குறிப்பாக க்யூபாவில் எதிர்ப்புகள் அதிகரித்துக் கொண்டிருந்தன. கிளர்ச்சியாளர்களைக் கட்டுப்படுத்த அவசர சிறைச்சாலைகள் அமைக்கப்பட்டன. ஆயிரக்கணக்கான க்யூபர்கள் கொல்லப்பட்டனர்.

காஸ்ட்ரோ. போராளிகளின் வாழ்க்கையை ஆழமாக வாசித்தார். அவர்களது போர் அணுகுமுறையை கவனமாக ஆராய்ந்தார்.

குறிப்பாக போராளிகளின் வாழ்க்கையை ஆமாக வாசித்தார். நரம்பு முறுக்கேறியது. வாழ்ந்தால் மார்த்தியைப் போல் வாழ வேண்டும். வீழ்ந்தால் மார்த்தியைப் போல வீழ வேண்டும் எனும் உத்வேகம் பிறந்தது. மார்த்தியின் ஒவ்வோர் எழுத்தையும் தேடிக் தேடி வாசித்தார். பின்னாளில் இவரைப் பற்றி குறிப்பிடும் போது, க்யூபா புரட்சிக்கான கருத்தியல் அடிப்படையை உருவாக்கிய சிந்தனையாளர் மார்த்தி என்றார்.

காலனியாதிக்கத்துக்கு எதிராக சக்தி வாய்ந்த முதல் தீக்குச்சியை கொளுத்திப் போட்டவர் ஹொஸே மார்த்தி இவர் ஜனவரி 28, 1853இல் ஹவானாவில் பிறந்தார். அவரது தொடக்கமாக அடிமைப்படுத்தியிருந்தததை அவர் தன்னுடைய இள வயதிலேயே தெரிந்து கொண்டார். கரும்புத் தோட்டங்களில் க்யூபர்களும் ஒடுக்கப்படுவதைக் கண்டு அதிர்ந்து போனார். இது தான் நிதர்சனம் என்று பிறரைப் போல் அவர் ஏற்றுக் கொள்ளவில்லை. தன்னுடைய எதிர்ப்பைத் தெரிவிக்க வேண்டும் என்று அவர் விரும்பினார்.

1869 இல் மார்த்தி, போராட்டத்துக்கு தன்னை தயார்ப்படுத்திப் கொண்டார். இந்தப் போராட்டத் துக்கு அவர் தேர்ந்தெடுத்த ஆயுதம் பத்திரிகை இவர் தொடங்கிய பாட்ரியா லிப்ரே எனும் ஸ்பானிஷ் பத்திரிகை, போராளிகளுக்காக அதாவது அரசாங்கத்தின் மொழி யில் சொல்வதானால் கலகக்காரர் களுக்கும் சமூக விரோதிகளுக்கும் ஆதரவாகக் குரல் எழுப்பியது. க்யூபா யாருக்கும் அடிமையாக இல்லாமல் சுதந்திர நாடாக மாற வேண்டும் என்று உரத்த குரலில் இந்தப் பத்திரிகை முழங்கியது. அப்போது மார்த்திக்கு வயது 17 மட்டுமே.

நேரம் கிடைக்கும் போதெல்லாம் காலனியாதிக்க எதிர்ப்பு கருத்துக்களை முன் வைத்துக் கொண்டே இருந்தார்.

(தொடரும்)

---

## மேலிருந்து கீழ்

1 - தவிர்க்க வேண்டிய தவறுகள்.
2 - கன்னி.
3 - தலைமயிர் உதிர்ந்து மொட்டையாகும் நிலை.
4 - உணர்ச்சியோ. புத்திக்கூர்மையோ இல்லாத நபரை இப்படியும் குறிப்பிடுவர்.
5 - நீர்மேகம்.
7 - முறம்.
9 - மலைப்பகுதியைச் சார்ந்த நிலப்பகுதி.
10- பல்கலைக்கழகம் வழங்கும் பட்டம்.
13- தாயின் மூத்த சகோதரி.
17- கடந்து போன நாளைக் குறிப்பிடுவது.
18- திக்கு.
20- உணவு வேட்கை.
22 - தரித்திருத்தல்.

## இடமிருந்து வலம்

1 - திரவ நிலையோ அவையோ அளவாக இருக்க வேண்டிய தன்மை.
4 - கூட்டாளி.
6 - சிவன் கையில் உள்ள ஆயுதம் ஒன்று.
7 - தீயின் வடிவம்.
8- யுத்தம் நடக்கும் இடம்.
11 - கழுத்தில் சூட்டுவது.
12 - கரம் கொடுத்தல் .
14 - நீர்த் தன்மையான ஊடகம்.
15 - பிழையற்றது.
16 - இணங்க.
17 - விருந்தினர்.
19 - இவன் மகாகவி.
21- வைதீக சமயங்களில் ஒன்றைப் பின்பற்றுபவன்.
23- சிறிய பெண்.
24- கர்ப்பம்

## சொற்சிலம்பம் போட்டி இல. 675

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | ■ | | 4 | 5 |
| | ■ | 6 | | ■ | 7 | | |
| 8 | 9 | | | 10 | | | ■ |
| 11 | | ■ | 12 | | | ■ | 13 |
| 14 | | | ■ | | ■ | 15 | |
| 16 | | ■ | 17 | | 18 | ■ | |
| 19 | | 20 | | ■ | 21 | 22 | |
| | ■ | 23 | | | ■ | 24 | |

அனுப்புபவர் பெயர்:--------------------------------

விலாசம்:--------------------------------------------

--------------------------------------------------------

அனுப்ப வேண்டிய முகவரி:

**சுடர் ஒளி யாழ். அலுவலகம்,**

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

பரிசுக்குரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 4.00மணி வரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி யாழ். உதயன் அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம். மேலதிக தொடர்புகளுக்கு 021 567 7609 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

### பாராட்டுப் பெறுவோர்

வே.சரஸ்வதி,
அம்பன்,
குடத்தனை.

இ.சண்முகதாஸ்,
கொத்தியால் ஒழுங்கை,
வல்வெட்டித்துறை.

தி. தட்சிகா,
இல-43,கலைவாணி வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

சி.இராசரத்தினம்,
பூம்பொழில்,திருநகர் தெற்கு,
கிளிநொச்சி.

திருமதி.புவனா,
நாவற்குழி கிழக்கு,
கைதடி.

### போட்டி இல 673இல் பரிசு பெற்றோர்

1. ம.வளர்மதி,
3ஆம் வட்டாரம்,
முள்ளியவளை.

2. க. ஜெயசீலன்
பொற்கலந்தம்பை,
வித்தகபுரம்,
தெல்லிப்பளை.

3. திருமதி செ. பூமணி,
இல 15/6,புவனேஸ்வரி
அம்பாள் வீதி,
நல்லூர் கிழக்கு,
யாழ்ப்பாணம்.

### சொற்சிலம்பம் போட்டி 674இன் விடைகள்

**மேலிருந்து கீழ்**

1.முதுகு.
2.கரும்பு.
3.துகில்.
4.திரு.
6.விரைவு.
9.மிகவும்.
11.பகைவர்.
13.தம்.
15.கூனல்.
16.அமுதம்.
18.சதகம்.
19.குண்டு.
21.கண்.
22.பலம்.
24.மத

**இடமிருந்து வலம்**

1. முகஸ்துதி.
5. சாவி.
7.துரு.
8.கிருமி.
10.கும்பல்.
12.சுதவு.
14.புகை.
15.கூவும்.
17.வசனம்.
20.முகர்தல்.
22.பண்.
23.தண்.
24.மலடு.
25.சம்மதம்

### போட்டி இல. 676

■ சொற்சிலம்பம் போட்டி 676ற்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2015 ஆம் ஆண்டு ஜீன் மாதம்24 ஆம் திகதி ஆகும்.

■ விடைகள் மற்றும் வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் முறையே 2015, ஜீலை 01 மற்றும் ஜீலை 08ஆம் திகதிய சுடர்ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும்.

■ 1ஆம் பரிசாக ரூபா 250 உம், 2ஆம் பரிசாக ரூபா 150 உம், 3ஆம் பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாகா எல்லையில் இராணுவ அணிவகுப்பு

இந்தியாவின் பஞ்சாப் மாகாணத்தில் உள்ள அம்ரித்ஸர் நகருக்கும் பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தில் உள்ள லாகூர் நகருக்கும் இடையில் அமைந்துள்ள ஒரு சிறிய கிராமம் வாகா.

பாகிஸ்தானையும் இந்தியாவையும் இணைக்கும் இங்குள்ள எல்லையே வாகா எல்லையாகும்.

கடந்த 1947 ஆம் ஆண்டு இந்தியா மற்றும் பாகிஸ்தான் தனித் தனியாகப் பிரிக்கப்பட்ட போது கிழக்கு வாகா இந்தியாவுக்கு, மேற்கு வாகா பாகிஸ்தான் நாட்டுக்கு என வகுக்கப்பட்டது அதன்படியான 'ராட் கிளிஃப்' கோடு இந்த கிராமத்தின் வழியாக செல்கின்றது.



இந்தியா மற்றும் பாகிஸ்தான் நாடுகள் தனித்தனியாக பிரிய முடிவு செய்தபோது இருநாட்டுக்கும் பொதுவான எல்லையை வகுப்பதில் பிரித்தானியாவை சேர்ந்த வழக்கறிஞரான சிரில் ராட்கிளிஃப் முக்கிய பங்காற்றினார்.

அவர் நினைவாகவே இந்த கோடு ராட்கிளிப்ஃ கோடு எனப்படுகிறது. இந்த வாகா எல்லை இந்தியாவின் அம்ரித்ஸரில் இருந்து 32 கிலோமீற்றர் தொலைவிலும் பாகிஸ்தானில் லாகூரில் இருந்து 24 கிலோமீற்றர் தொலைவிலும் அமைந்துள்ளது.

இந்த எல்லையில் தினத்தோறும் இருநாட்டு ராணுவ வீரர்களின் அணிவகுப்பு நடைபெறும்.

இந்த அணிவகுப்பை பார்ப்பதற்காக இருநாட்டு எல்லைகளிலும் ஏராளமான மக்கள் குவிவார்கள். தினமும் சூரிய அஸ்தமனத்துக்கு 2 மணி நேரங்கள் முன்பாக இந்த அணிவகுப்புத் தொடங்கும்.

இதில் இந்தியாவின் எல்லை பாதுகாப்பு படைவீரர்களும் பாகிஸ்தானின் ரெஞ்சர்ஸ் வீரர்களும் கலந்துகொண்டு



தங்களின் கம்பீரமான அணிவகுப்பை நடத்துவார்கள்.

இருநாட்டு எல்லையிலும் கூடியிருக்கும் மக்கள் தங்கள் நாட்டு வீரர்களில் அணிவகுப்பின் போது மகிழ்ச்சியாக பாகிஸ்தான் 'ஜிந்தாபாத்' என்றும் 'ஜெய்ஹிந்த்' என்றும் கோஷமிட்டு அவர்களை உற்சாகப்படுத்துவார்கள்.

அணிவகுப்பு முடிந்த பின்னர் தங்களது நாட்டின் கொடியை கம்பத்தில் இருந்து வீரர்கள் இறக்குவார்கள். பின்னர் இரு நாட்டு வீரர்களும் பரஸ்பரமாக கைகுலுக்கிக் கொள்வார்கள்.

இந்த நிகழ்ச்சியை பார்ப்பதற்காக உள்ளூர் மக்கள் மட்டுமில்லாது ஏராளமான சுற்றுலா பயணிகளும் அங்கு குவிவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எத்தனை வயதினிலே ?



எட்டு வருடங் களுக்குப் பிறகு ஜோதிகா நடித்த 36 வயதினிலே கல்லாப் பெட்டிகளையும், இரசிகர்களின் இதயங் களையும் ஒருசேர நிறைத்ததில் சூர்யா ரொம்ப மகிழ்ச்சியாக இருக்கிறாராம். இந்த நிலையில் சூர்யாவையும், ஜோதிகாவையும் ஜோடியாக நடிக்கவைப்பதற்கு சில தயாரிப்பாளர்கள் கேட்கப்போக, நீங்க தாமதமாகி விட்டீர்கள். நானே அந்தப் படத்தைத் தயாரிக்கப் போகிறேன், கதை ஆயத்தமாகி விட்டது எனச் சொல்லி தயாரிப் பாளர்களின் இதயத்தில் இடியை இறக்கிவிட்டாராம் சூர்யா.

## வயது ஏறினால்...

வயது ஏறினால், நடிகைகளுக்கு மதிப்பு குறைவதுதான் வழக்கம். ஆனால் நயன்தாரா விஷயத்தில் அப்படியே தலைகீழ். வயது ஏற ஏற, அவருடைய மதிப்பு உச்சத்தில் போய்க் கொண்டிருக்கிறது. சமீபத்தில் தெலுங்கில் சிரஞ்சீவி நடிக்கும் 150ஆவது படத்தில் நடிக்க அழைப்பு வந்தபோது பெரிய படம் என்பதால் மூன்று கோடி கொடுங்க என்றாராம். நயன்தாராவை விட விருப்பமில்லாமல் சம்மதம் சொல்லி விட்டார்களாம்.

## நீளும்...

வாலு படத்...
முடித்து வெளி...
செய்யப்பட்டா...
ஹன்சிகா நடித்...
ஜூலியட் படமு...
வாலு படத்தை...
முன்னரோ அ...
வெளியிடலாம்...
முடிவுசெய்துள்...
காரணம், சிம்...
காவுக்கும் இ...
இல்லாததால்...
ஜூலியட் படத்...
முக்கியத்துவம்...
இதனால் வாலு...
பாதிப்பு எனத்...
தள்ளிவைத்து...
நீண்டுக்கிட்டே...

## வில்...

நடிகரா...
கொன்று...
விக்ரந்த்...
உதய நி...
வில்லனா...
வில்லன்...
வில்லன்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ம் வாலு.....

த்தை ஒரு வழியாக
ளியிட்டுத் திகதி முடிவு
ாலும் அதே திகதியில்
டித்த ரோமியோ
டமும் வெளியாவதால்,
தை ஒரு வாரம்
அல்லது பின்னரோ
ம் என
ள்ளார்களாம்.
ம்புவுக்கும் ஹன்சி
இடையே நட்பு
ல் அவர் ரோமியோ
த்துக்கு
வம் கொடுப்பார்.
ாலு படத்துக்குத்தான்
த்
துள்ளனர். வாலு
டே போகுது!

## ஒரு கல் ரெண்டு மாங்காயா?

உதயநிதி ஸ்டாலின் நடித்த ஒரு கல் ஒரு கண்ணாடி அவரின் ஒரே பிரபலமான படம். அடுத்து நடித்த படங்கள் எதுவும் சரியாகப் போகாததால், உடனடியாக ஒரு பிரபலமான படம் கொடுக்க வேண்டிய கட்டாயத் தில் உள்ளார். அடுத்த ஆண்டு உதயநி தி-ராஜேஷ்-சந்தானம் மீண்டும் இணைகிறார்கள். ஒரு கல்... ரெண்டு மாங்காயா?



## ல்லன் வேடத்துக்குத் தயார்

கராக 10 ஆண்டுகளுக்கு முன்பே அறிமுகமானாலும் சொல்லிக்
ளும்படி ஒரு படம் கொடுக்க முடியாமல் திணறி வருகிறார்
ந்த். அதனால் வில்லன் வேடத்துக்குத் தயாராகி விட்டாராம்.
நிதி ஸ்டாலின் நடித்து வரும் கெத்து படத்தில் ஸ்டைலிஷ்
வாக வலம் வருகிறாராம். மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த
ன் வேடமாம். அதற்கு கிடைக்கும் வரவேற்பைத் தொடர்ந்து
ன் வேடங்களிலும் கவனம் செலுத்த முடிவாம்.



## எரிச்சலில் உள்ள நாயகிகள்

தனுஷ், சமந்தா இணைந்து தற்போது நடிக்கும் வேலையில்லா பட்டதாரி 2 படத்தில் இருவருக்குமான கெமிஸ்ட்ரி நன்றாகவே உள்ளதாம். அதனால் தனுஷ் அடுத்து நடிக்கும் வெற்றிமாறனின் வடசென்னை படத்திலும் சமந்தாவையே நாயகியாக்கிவிட்டார். அது மட்டுமின்றி விஜய், சூர்யா என பெரிய நடிகர்களின் அடுத்தடுத்த படங்களில் சமந்தா ஒப்பந்தம் ஆகியுள்ளதால், மற்ற நாயகிகள் எரிச்சலில் உள்ளனராம்.

## இரசிகர்களின் ஆனந்தக் கண்ணீர்

கடந்த மூன்று வருடங்களாகவே அஜித்தின் படங்கள் தெலுங் கானாவில் மிகவும் பிரபலமாகி வருகின்றன. என்னை அறிந்தால் படத்தின் தெலுங்குப் பதிப்பு எந்தவாடு கனி வெளியீட்டின் போது ஆந்திரா முழுக்க பவன் கல்யாண் ரசிகர்கள் அஜித்துக்கு ஆதரவாக பனர்களும், போஸ்டர்களும் வைக்க, அஜித் ரசி கர்கள் ஆனந்தக் கண்ணீரில் நனைந்து விட்டார்கள்.


## விஸ்வரூபம் 2 எந்தளவில்...

விஸ்வரூபம் 2 படத்தின் வரவு செலவுத்திட்ட விஷயத்தில் கமலுக்கும், தயாரிப்பாளர் ஆஸ்கார் ரவிச்சந்திரனுக்கும் இடையில் ஏற்கனவே மனக்கசப்பு. இந்த நிலையில் கமலின் புதிய படமான தூங்காவனம் செய்திகளால் மிகவும் நொந்துபோயுள்ளாராம் ரவிச்சந்திரன். விஸ்வரூபம் இரண்டை அப்படியே கிடப்பில் போட்டுவிட்டாரே என்று கமல் மீது சங்கடப்பட்ட ரவிச்சந்திரன், சம்பத்தில் கமலின் அண்ணன் சந்திரஹாசனை சந்தித்து, விஸ்வரூபம் 2 வெளியீடு தொடர்பாக நீண்ட நேரம் பேச்சு வார்த்தை நடத்தியுள்ளாராம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரங்கு வைத்தியம்



குரு நாதா! இனிமேல் நாம் மருத்துவத் தொழில் செய்தால் என்ன? எனக் கேட்டான், முட்டாள்.

அதனால் நமக்கு என்ன பயன்? என்று புரமார்த்த குரு கேட்டார்.

பணம் கிடைக்கும். அத்துடன் புண்ணியமும் கிடைக்கும் என்றான் மூடன்.

அப்படியே செய்வோம் என்றார் குரு.

மனிதர்களுக்கு மட்டும் தானா? என்று கேட்டான் மண்டு.

மனிதர்களுக்கும் வைத்தியம் செய்வோம். மாட்டுக்கும் செய் வோம். குழந்தைக்கும் செய் வோம். குரங்குக்கும் செய்வோம் என்றான் மட்டி.

பரமார்த்தரும் அவரது ஐந்து சீடர்களும் மருத்துவம் செய்யும் செய்தி ஊர் முழுதும் பரவியது.

காய்ச்சலால் அவதிப்பட்ட ஒருவன் வந்தான். அவன் உடலைத் தொட்டுப் பார்த்த மடையன், குருவே! இவன் உடம்பு நெருப்பாகச் சுடுகிறது என்றான்.

அப்படியானால் உடனே உடம்பைக் குளிர்ச்சி அடையச் செய்ய வேண்டும் என்றார் பரமார்த்தர்.

அதற்கு என்ன செய்வது? எனக் கேட்டான் முட்டாள்.

இந்த ஆளைக் கொண்டு போய்த் தொட்டியில் உள்ள தண்ணீரில் அமுத்தி வையுங் கள். ஒரு மணி நேரம் அப்படியே கிடக்கட்டும் - என்றார் குரு.

உடனே மட்டியும் மடையனும் அந்த நோயாளியைத் தூக்கிக் கொண்டு போய், தொட்டி நீரில் போட்டனர். முட்டாளும் மூடனும் மாற்றி மாற்றி அவனை நீரில் அமுக்கினார்கள்.

நோயாளியோ ஐயோ, அம்மா! என்று அலறியபடி விழுந்தடித்து ஓடினான்.

கொஞ்ச நேரம் கழித்து ஒரு கிழவி வந்தாள். கண் வலிக்கிறது என்றாள்.

இப்போது நேரமில்லை. உனது கண்ணை மட்டும் தோண்டி எடுத்துக் கொடுத்து விட்டுப்போ. சரி செய்து வைக்கி றோம் என்றான் முட்டாள்.

கிழவியோ, ஐயையோ என்று கத்திக் கொண்டு ஓடினாள்.

சிறிது நேரம் சென்றது. உடம்பெல்லாம் வெட வெட என்று நடுங்குகிறது என்றபடி ஒருவன் வந்தான்.

சும்மா இருப்பதால்தான் ஆடுகிறது. உடம்பு முழுவதும் கயிறு போட்டுக் கட்டி விடுங்கள் அப்போது எல்லாம் சரியாகி விடும் என்றார் பரமார்த்தர்.

முட்டாளும் மூடனும், வந்தவனை இழுத்துக் கொண்டு வந்து கட்டி வைத்தனர்.

கட்டி வைத்த பிறகும் அவன் உடம்பு நடுங்குவதைக் கண்ட மட்டி, குருதேவா! இது குளிரால் வந்த நோய். இது தீராது. உடம் பைச் சூடாக்க வேண்டும் என்றான்.

அதைக் கேட்ட முட்டாள் தன் கையிலிருந்த கொள்ளிக் கட்டையால் நோயாளியின் உடல் முழுவதும் வரிவரியாகச் சூடு போட்டான்.

வலி தாங்காத நோயாளி சுருண்டு விழுந்தான்.

பல் வலி தாங்க முடிய வில்லை. என்ன செய்வது? என்று கேட்டபடி வேறொருவர் வந்தார்

வலிக்கிற பல்லை எடுத்து விட்டால் சரியாகி விடும் என்றார் பரமார்த்தர்.

சீடர்களோ, ஆளுக்குக் கொஞ்ச மாக எல்லா பல்லையும் கத்தி யால் தட்டி எடுத்துப் பொட்டல மாகக் கட்டிக் கொடுத்தனர்!

இனிமேல் உனக்குப் பல் வலியே வராது! என்றார் பரமார்த்தர்

சற்று நேரம் கழிந்தது. யானைக்கால் வியாதிக்காரன் ஒருவன் வந்தான்.

உலகிலேயே இதற்கு இரண்டு வகையான வைத்தியம்தான் இருக்கிறது. நன்றாக இருக்கிற காலை வெட்டிவிட்டு, அந்த இடத்தில் யானையின் காலை ஒட்டி விட வேண்டும். இல்லா விட்டால் அந்தக் காலுக்குச் சமமாக இந்தக் காலில் உள்ள சதையைச் செதுக்கி எடுத்து விட வேண்டும் என்றார் பரமார்த்தர்

யானைக்கால் வியாதிக் காரனோ, காலை விட்டால் போதும் என்று தப்பினான்.

ஐயா! ஒரே இருமல். தொடர்ந்து இருமிக் கொண்டே இருக்கிறன் என்றபடி வேறு ஓர் ஆள் வந்தார். வாயைத் திறப்பதால்தானே இருமல் வருகிறது. வாயை மூடிவிட்டால் என்ன என்று நினைத்தார், பரமார்த்தர். இவர் வாயை அடைத்து விடுங்கள்! என்று கட்டளை இட்டார்.

குருவின் சொற்படி, கிழிந்த துணிகளை எல்லாம் சுருட்டி, இருமல்காரனின் வாயில் வைத்துத் திணித்தான் மட்டி.

என் ஆடு சரியாகத் தழை தின்னமாட்டேன் என்கிறது என்றபடி ஒருவன் வந்தான். அந்த ஆட்டைக் கண்ட குரு, தொண்டையில் ஏதாவது அடைத்துக் கொண்டு இருக்கும் என்றார்.

வாயைப் பெரிதாக ஆக்கிவிட்டால் போதும் என்றான் மடையன்.


கத்தி ஒன்றைத் தூக்கிக் கொண்டு வந்தான் முட்டாள்.


அதைப் பிடுங்கி, ஆட்டை வெட்டப் போனான் மூடன்.

பயந்துபோன ஆட்டுக்காரன், ஆட்டை இழுத்துக் கொண்டு ஓட்டம் பிடித்தான்.

குருவும் சீடர்களும் வைத்தியம் என்ற பெயரில் கண்டபடி நடந்து கொள்வதைப் பற்றி எல்லோரும் பேசிக் கொண்டனர்.

பஞ்சாயத்தார் ஒன்று கூடி, குருவும் சீடர்களும் இனிமேல் இந்த ஊருக்குள்ளேயே நுழையக் கூடாது என்ற தண்டனையைக் கொடுத்து அனுப்பினர்.




இந்த இரு படங்களிலும் 5 வித்தியாசங்கள் உண்டு. கண்டுபிடியுங்கள்.



வாங்க

நிறந் தீட்டுவோம்

## மூத்தோர் சொல்லை மதிக்கணும்

நித்தம் நித்தம் குளிக்கணும்
நினைவில் பாடம் பதிக்கணும்
சுத்தமாக உடுத்தணும்
சுறுசுறுப்பாக இருக்கணும்

சித்திரங்கள்பழகணும்
சிந்தனையை வளர்க்கணும்
முத்து முத்தாய் எழுதணும்
முதுமை வரை படிக்கணும்

ஆடல் பாடல் பழகணும்
அன்னை தந்தையை
வளர்க்கணும்
மூடச் செயலை
எதிர்க்கணும்
மூத்தோர் சொல்லை
மதிக்கணும்

ஹரன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மதிப்பு பூச்சியம்

மதிப்பு பூச்சியம்
மது கொடியது ....
மாதுவும் கொடியது ....
காதல் எல்லாவற்றையும்....
விட கொடியது ....!!!

உயிரே ...
எண்ணத்தால் கவிதை ...
எழுதி - கண்ணீரால் ...
அழிக்கிறேன் ....!!!

தோல்வி ஒன்று ...
இல்லாவிட்டால் ....
காதல் என்ற ஒன்றுக்கு ....
மதிப்பு பூச்சியம் .....!!!

–இனியவன்

## வயதான வாலிபம் ..!

துடையைப் பார்த்து எடையைப் போட்டு
துணைக்கு அழைக்க எண்ணாதே
இலையைப் போட்டு குழையல் போட்டு
தின்ன என்னைப் பார்க்காதே

வளையல் வாங்கி கையில் போட்டு
வளைத்துப் போக எண்ணாதே
விலையைப் போட்டு உடலைத் தின்ன
மீசையாரே எண்ணாதே ..

நரைகள் வீழ்ந்த ராசாவுக்கு
நரைக்கவில்லை ஆசை
இளசு போல துள்ளி ஓடி
இரையை தேடுதேன் பாசை ..?

வெட்டி வெட்டி விழியை ஆட்டி
விடலை பிள்ளை பார்க்காதே
வெள்ளைப் பல்லைக் காட்டி என்னை
வெளியில் சிரிக்க வைக்காதே

அகவை தாண்டி அறுபதாச்சு
ஆசை நரைக்கவில்லை
ஓசை எழுப்பி ஆசை வீச
உங்கள் நிலை பாவம் தான் ..!

–வன்னி மைந்தன்

## இது யார் செய்த பாவமோ ?

புஸ்பா கிறிஸ்ரி

பகல் முழுவதும்
பாத யாத்திரை போய் வந்த
வாகனங்கள் குறைந்து
அமைதியாகக் கிடக்கும் சாலை
சரித்திரமாகி விட்ட
பணக்கார வீட்டுப் பிறந்த நாள் விழா.
சம்பவமாகி தெரியும்
ஏழை வீட்டுக் குழந்தையின் நோய்.
அரங்கேற்றம் முடித்து வந்த
நர்த்தன தாரகையின் அழகு.
புது வீடு வாங்கிக் குடித்தனம்
வந்த புது மணத் தம்பதிகள்.
பக்கத்து வீட்டில் புதிதாய்
முளைத்த இளம் வக்கீல்.
நாளை கார் ஓட்டப்பந்தயத்தில்
ஓடவிருக்கும் வீரன்...
இன்னும் எத்தனையோ....
இவை பற்றிக் கவலைப்படாத
என் கண்கள் பனித்தன
பல்கனியில் இருந்த மறைவில்
இருந்த அந்த மாடப் புறாவின்
முட்டை உடைந்தது கண்டு.
என் கண்கள் பனித்தன...
இது யார் செய்த பாவமோ ?

–புஸ்பா கிறிஸ்டி



## சினேகம்

பெருமழை இரவொன்றில்
மயிர் நிறைந்த என்
மார்பில் முகம்புதைத்தபடி
அந்த கேள்வியை நீ கேட்டாய்
இந்த சினேகம்
இந்த யுகத்தில்தான்
உண்டானதென
நினைக்கிறாயா என
இருவரையும் தூக்கி
காலபெருவெளியில்
தள்ளியது
அந்த கணம்
இன்றுவரை
யுகங்களும்
முடிவதாயில்லை
சினேகமும்
முடிவதாயில்லை –பிரியன்

## அன்னை

கருவறையில் சுமையும் தந்தேன்.
போதாததற்கு காலால்உதைத்தும்
வலி தந்தேன் அத்தனையையும்..
தாங்கும் உடல் உளவலிமையும்..
அம்மையே நீர் பெற்றிருந்தாலும்.
இத்தனை வலி தந்த என்னை..
மன்னித்துவிடுங்கள்
அம்மா....!!!
உங்களுக்கு தெரியாமல்
நண்பருடன் உண்டிருக்கிறேன்
நாவுக்கு சுவையென்றால் உம[illegible]
தராமலும் உண்டிருப்பேன்....
எனக்கு தராமல் நீவீர் எதையும்[illegible]
உண்டதை நான் பார்த்ததில்லை[illegible]
இந்த சுயநலவாதியான இவனை[illegible]
மன்னித்துவிடுங்கள்...
அம்மா....!!!
வீட்டில் படைத்தல்
காத்தல் அருளல்....
உறவில் அன்பு
கருணை இரக்கம்.....
அத்தனை இறைபணியையும்
நீவீர்....
பெற்றிருந்த போதும்
தெய்வத்தை தேடி....
ஊர் தாண்டி தேசம்
தாண்டி கோயில்.....
சென்ற என்னை
மன்னித்துவிடுங்கள்...
அம்மா....!!!



## பெண்கள்

குடிகார கணவனின்
உளறலில்
வாழ்கையை
புரிந்து கொள்ள
முடியாமல்
தள்ளாடும்
பெண்கள் !!!!!1
சந்தேக
கணவனின்
கேள்விக்கு
பதில் தேடி
வாழ்கையை
தொலைக்கும்
பெண்கள்!!!!!
சில முடிச்சுக்களை
போட்டு
பல விபரீத
முடிவுகளை
தருவதுதான்
திருமணமோ????

–கலை

## குறுநகை ஒன்று...

சட்டென எதோ ஒன்று
பற்றிக் கொண்டது எனை
இரு கற்களின் உரசலில்
வெளிப்பட்ட தீபத்தில்
மனதும் உடலும் சந்தித்த
ஒரு சிறு புள்ளியில்
எரிந்து விழும் சாம்பலாய்
என் ஏக்கமும் உள்ளே
கனன்று அடங்கிய
கோபத்தின் மிச்சம்
ஆசுவாசப்படுதலில்
அழகாய் வெளிக்காட்டுகிறேன்
குறுநகை ஒன்றை...

–மதி

## பரம ஏழை

பரம ஏழை
இவன் திருடியிருப்பான்
பரம்பரைப் பணக்காரன்
எதுக்குத் திருடுவான்?
வெள்ளையாய் இருப்பவன்
பொய் சொல்ல மாட்டான்
என்பது போல்
கொள்ளையடிப்பதிலும்
நம்பிக்கைகள்
திருடியதால் தான்
அவன் பணக்காரனாய் இருப்பதையும்
திருடத் தெரியாததால்
இவன் ஏழையாய் இருப்பதையும்
தெரிந்துகொள்ளாமல்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு...

இன்றைய நவீன யுகத்தில் ஆண்களுக்கு நிகராக பெண்களும் பணிக்குச் செல்லும் நிலை வந்துள்ளது. போதிய கல்வியறிவு, எத்தகைய செயல் களையும் திறம்பட முடிக்கும் தன்மை பெண்களுக்கும் உண்டு என்பதை தற்போதுதான் ஆணாதிக்க சமூகம் உணரத் தொடங்கியுள்ளது. பொருளாதார சூழ்நிலையில் இன்று ஆண், பெண் இருவரும் பணிக்குச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தமும் தற்போது உள்ளது..

இத்தகைய சூழலில் பெண்கள் தங்கள் குடும்பத்தையும் கவனித்து வேலைக்குச் செல்லும் நிலையில் பல உடல் ரீதியான தொந்தரவுக்கு ஆளாக நேரிடுகின்றனர்.

. பொதுவாக பெண்களுக்கு இயற்கையாகவே மாதவிலக்கு சுழற்சியின் காரணமாக பலவகையான சத்துக் குறைபாடுகள் உண்டாகிறது. இத்தகைய சத்துக் குறைபாட்டால் உடல் பலவீனமடைந்து பாதிப்படைகிறது.

இதனால்தான் நம் முன்னோர்கள் பெண்களுக்கு பருவம் எய்தியவுடன் வீட்டில் இருக்கவைத்து உடலுக்கு வலு கொடுக்கும் உணவுகளைக் கொடுத்து வந்தனர். மாதவிலக்கு காலங்களில் போதிய ஓய்வும் கொடுத்து வந்தனர். ஆனால், இன்றைய சூழலில் பணிக்குச் செல்லும் பெண்களுக்கு ஓய்வு என்பது கிடையாது. மேலும் உணவு தயாரித்து அதை சாப்பிடக்கூட நேரமில்லாமல் அவசர அவசரமாக கிளம்பி பயணத்தின்போதே உண்கின்றனர் , அல்லது பட்டினி கிடக்கின்றனர். போதிய உணவு உண்ண நேரமின்மை, காலந்தவறிய உணவு, அவசர அவசரமாக உண்ணும் நிலை இவற்றால் பெண்களுக்கு குடலில் புண் உண்டாகிறது.

இதனால் பித்தம் அதிகரித்து அஜீரணம், தலைவலி, கை, கால் வலி, இடுப்பு, முதுகு வலி போன்றவற்றை ஏற்படுத்துகிறது. மேலும் உடல் அசைவில்லாமல் கணனி முன் அதிக நேரம் அமர்ந்திருந்து வேலை பார்ப்பவர்கள் இரவுப் பணி, குறைவான தூக்கம், மன அழுத்தம் இவைகளாலும் பெண்களின் உடல் பாதிப்படைகிறது. இத்தகைய பாதிப்புகள் பின்னாளில் பெரிய நோய்களாக மாறிவிடும்.

இத்தகைய உடல் பிரச்சினைகளில் இருந்து விடுபட இவர்களுக்கு ஊட்டச்சத்து மிகுந்த உணவு அவசியத் தேவையாகும். அதற்காக ஊட்டச்சத்து மாத்திரைகளை வாங்கி உண்பது நல்லதல்ல. அவை உடலுக்குத் தீங்கிழைக்கக் கூடியவை.

இவர்கள் உணவில் கீரைகள், காய்கள் அதிகம் சேர்த்துக்கொள்ள வேண்டும். சிறுநீரை அடக்குவது அல்லது சிறுநீர் கழிவதைத் தடுக்க தண்ணீர் அருந்தாமல் இருப்பது போன்றவற்றை தவிர்த்து நன்கு நீர் அருந்த வேண்டும். முளை கட்டிய பயறு வகைகளை உணவில் சேர்த்துக் கொள்ளலாம்.

வேலைக்குச் செல்லும் பெண்கள் ஊட்டச்சத்து மிகுந்த சூப் செய்து அருந்தலாம்.

■ துவா

## பெருமை கொள்ளுங்கள்

பெண் மக்கள், பொன் மக்களே
பெண் மக்கள், பொன் மக்களே
பெண் மக்கள் நாம் அனைவரும்
இன்றைய நாளினில் பொன்
மக்களே

பெண் மக்கள் பிறந்தால்
சலிக்கும் நாள்கள் போனது

பெண் மக்கள் வேண்டும்
என கேட்கும் நாள்கள் வந்தது

பெண்ணான எனக்கு இது
மகிழ்ச்சி தருகின்றது

பொன்னான பெண் மக்களே
பெண்ணாக பிறந்ததற்கு
பெருமை கொள்ளுங்கள் இனி

கண்ணாக போற்றட்டும் நாடு
இனி நம்மை

நாம் சிறப்பது ஒரு மகளாக
பெற்றோருக்கு சிரிப்பை தந்து

ஒரு சகோதரியாக சில ஆண்
மக்களின் அறிவை திறந்து

ஒரு மனைவியாக வீட்டில்
விளக்கேற்றி நம் இல்லம் செழிக்க

ஒரு தாயாக பல மக்களுக்கு
அவருக்கு அமுதும், அறிவும்
சேர்ந்து ஊட்டி வளர்த்து

ஒரு தலைவியாக அலுவலகத்தில்
பல வேலையாள்களை நிர்வகித்து

எங்கும் பெண்கள் இன்று பணி
புரிகிறார்கள், எதிலும் பங்கு
கொள்கிறார்கள்

பெண்களே பெருமை கொள்ளுங்கள்
சிறுமையிலிருந்து நாம் தப்பி
விட்டோம், சிறந்து விட்டோம்

■ வாணன்

# இயற்கை அழகுக்கு.....

நல்ல உணவு, அமைதியான மனம், மலர்ந்த முகம் இந்த மூன்றுமே உலகின் தலைசிறந்த டாக்டர்கள். மூன்றும் நன்றாக இருந்தால் தோற்றத்தில் அழகு துள்ளும். இயற்கையாகவே பெண்கள் அழகுதான். அழகுக்கு மேலும் அழகு சேர்க்க சில விடயங்கள்...

பசுமையான மரம் செடி கொடிகளை அடிக்கடி பார்ப்பது, கண்ணுக்கு குளிர்ச்சி. மனதுக்கும் மகிழ்ச்சி. கன்னம் ஒட்டிப் போய் இருக்கிறதா? தினமும் வாயில் தண்ணீர் ஊற்றி கன்னத்தின் உட்பகுதி விரியுமளவுக்கு நன்றாக கொப்பளியுங்கள். ஆடை அணிவது முதலில் வசதிக்காக என்பது நினைவிருக்கட்டும். உடை உடலை இறுக்கிப் பிடிக்கும் அளவுக்கு இறுக்கமாக இருக்கவேண்டாம். இலேசாக இருக்கிறது என்று பெரிதாகவும் தொளதொளப்பாகவும் வேண்டாம். கச்சிதமாக இருப்பதே அழகு.

வேலைக்கு போகும் பெண்களுக்கு புடவை கம்பீரமாக இருந்தாலும், இன்றைய சூழலில் அதை எப்போதுமே கட்ட முடிவதில்லை. சுடிதார், சல்வார் சௌகரியமாக இருக்கிறது. புடவை கட்ட முடியவில்லையே என்ற ஏக்கமின்றி அணியுங்கள்.

வெளியூர் அல்லது உல்லாசப் பயணத்துக்கு நீளக்காற்சட்டை எப்போதும் வசதிதான். உடல் உழைப்பு அதிகம் தேவைப்படுகிற வேலை என்றாலும் நீளக்காற்சட்டை , பணியிடத்தில் இடுப்பு அல்லது பின்புறம் முழுமையாக தெரியும் வகையிலான குட்டை உடுப்புகளைத் தவிர்ப்பது நல்லது.

கூந்தலில் சிக்கு விழுகிறது என்ற பயத்தில் பலர் வாரம் ஒருமுறை தலை குளிப்பதைக்கூட தவிர்க்கின்றனர். தலையை குனிந்தபடி கூந்தலை முன்னால் போட்டு கைவிரல்களால் கோதி அழுத்தி நன்றாக அலசி சுத்தம் செய்யவேண்டும். அழுக்கு எளிதில் நீங்குவதுடன், சிக்கு விழாது. வெயில் காலங்களில் வாரத்துக்கு மூன்று தடவையாவது முழுகினால் நல்லது.

வெயில் காலத்தில் உடற்பயிற்சி செய்யும்போது கூந்தலை இறுக்கிக் கட்டக்கூடாது. முடி அதிகமாக உதிரிந்து விடும். தூக்கி குதிரைவால் போட்டு கட்டலாம். இறப்பர் நாடா (றிபன்) போட வேண்டாம்.



தலையை துடைக்க தனியாக துடைப்பான் வைத்துக் கொள்ளுங்கள். முகத்துக்கு அதே துண்டை பயன் படுத்தும்போது, தலையில் இருக்கக் கூடிய பொடுகு முகத்தில் பருக்கள் வரக் காரண மாகலாம். பொறுப்புள்ள பணியில் இருப்பவர்கள் ஓரளவு குறைந்த கலரில் நீளக்காற்சட்டையும் அதே துணியில் முக்கால் கை சட்டையும் அணியும்போது அசத்தலாக தோற்றமளிக்கும். கேஷுவல் உடைகளை பொறுத்தவரை இது பெண்களுக் கானது, இது ஆண்களுக்கானது என்ற வித்தியாசம் மறைந்து வருவதால் எதெல்லாம் உடலுக்கும் வேலைக்கும் சௌகரி யமாக இருக்கிறதோ அதையெல்லாம் அணிய பழகிக்கொள்ள வேண்டும்.

என்னதான் பொறுமையாக நடந்து கொண்டாலும் அலைத மீறி ஆத்திரம் உண்டாக்கும் வகையில் யாராவது ஏதாவது பேசுவார்கள், செய்வார்கள். இது வீட்டுக்கும் அலுவலகத் துக்கும் பொதுவானது. ஆனால் நம்மால் கோபத்தை வெளிப் படுத்த முடியாத நிலை இருக்கும். இதனால் உணர்ச்சி கள் உள்ளேயே அடக்கப்பட்டு மன அழுத்தம் நிறைந்திருக்கும். இது மிகவும் ஆபத்தானது. இத்தகைய சந்தர்ப்பத்தில் என்னதான் முயன்றாலும் நம்மால் அழகாக காட்சியளிக்க முடியாது. தியானம், யோகாசனம், இசை கேட்பது, பாடுவது, நடனமாடுவது போன்ற ஏதாவது ஒரு பொழுது போக்கில் ஈடுபட்டு மன அழுத்தத்தை குறைக்க வேண்டும்.

■ மகி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டொக்டர்.எம்.கே.முருகானந்தன்.
MBBS(Cey), DFM (Col), FCGP (col)
குடும்ப மருத்துவர்

# நீரிழிவினால் ஏற்படும் கண்பார்வைப் பாதிப்புகள்

எனக்கு கண் நல்லாத் தெரியுது. நான் ஏன் கண் வைத்தியரிடம் போக வேணும் என அவர் ஆச்சரியப்பட்டார்.




அவர் ஒரு நீண்டகால் நீரிழிவு நோயாளி. வீட்டில் குளுக்கோமீற்றர் வைத்திருக்கிறார். சீனியின் அளவைப் பார்த்து திருப்தியடைந்துவிடுவார்.

அவரது HbA1C அளவானது 8.5 ல் இருந்தது. HbA1C என்பது ஒருவரது சீனியின் அளவு சென்ற மூன்று மாதங்களாக எந்த நிலையில் இருந்தது என்பதைக் கணிக்கும் முறை என்பதை நீங்கள் அறிவீர்கள். இது 6.5 என்ற அளவிற்குள் இருக்க வேண்டும்.

நீரிழிவானது பல்வேறு உறுப்புகளையும் பாதிக்கிறது. நீரிழிவினால் சிறுநீரகம் பாதிப்புறுவதை பலரும் அறிவார்கள். அதேபோல தங்கள் பார்வைத் திறனையும் மோசமாகப் பாதிக்கக் கூடியது என்பதைப் பெரும்பாலானோர் உணர்ந்து கொள்ளவதில்லை.

நீரிழிவு நோயால் பார்வை பல்வேறு வழிகளில் பாதிப்புறலாம்.

**நீரிழிவினால் விழித்திரைப் பாதிப்பு**

கண்களின் விழித்திரையில் (Retina) ஏற்படும் பாதிப்பு மிக முக்கியமானது. விழித்திரையானது Rod and cones ஆகிய கலங்களால் நிறைந்திருக்கிறது. நாம் பார்க்கும் போது எமது விழித்திரையில் ஒளியாக விழும் பிம்பத்தை மின்அதிர்வுகளாக மாற்றி, பார்வை நரம்பு (Optic Nerve) ஊடாக மூளைக்கு அனுப்பும் பணியை இவை செய்கின்றன.

உடலிலுள்ள எல்லாக் கலங்களும் போலவே விழித்திரைக் கலங்களுக்கும் ஒட்சிசனும் போசனைப் பொருட்களும் தேவை. இவை இரத்தக் குழாய்கள் ஊடாக வரும் இரத்திலிருந்தே கிடைக்கிறது. நீரிழிவு நோயானது இரத்தக் குழாய்களைப் பாதிப்பதை அறிவீர்கள். அதுபோலவே விழித்திரைக் குருதிக் குழாய்களையும் பாதிக்கும்.

நீரிழிவு நோயுள்ள எவருக்கும் விழித்திரைப் பாதிப்பு ஏற்பட வாய்ப்புண்டு. இருந்தபோதும் நீண்ட காலமாக நீரிழிவு உள்ளவர்களுக்கு பாதிப்பு ஏற்படுவதற்கான சாத்தியம் அதிகமாகும்.


அமெரிக்காவில் நீரிழிவு உள்ளவர்களில் 40 முதல் 45 சதவிகிதமானவர்கள் இதனால் பாதிக்கப்பட்டிருப்பதாக தெரிகிறது.

எங்கள் நாட்டிலும் இதற்குக் குறையாது என்றே சொல்லத் தோன்றுகிறது. இருந்தபோதும் இங்குள்ள பெரும்பாலான நீரிழிவு நோயாளர்கள் கண் மருத்துவரை அணுகுவதில் அக்கறை காட்டாது இருப்பதால் தாக்கத்தின் வீச்சு வெளிப்படையாகத் தெரியாது இருக்கிறது.



இப்படி இருக்கும் படம்

நீரிழிவு விழித்திரை பாதிப்பு இருந்தால் இவ்வாறுதான் தெரியும்




**எத்தகைய பாதிப்புகள் ஏற்படும்**

பாதிப்புற்ற விழித்திரை இரத்தக் குழாய்களிருந்து இரத்தம் கசியலாம். இது கண்ணின் நடுப் பகுதிக்குள் பொசிந்து வந்து பார்வையைத் தெளிவற்றதாக்கும்.

இரத்தம் போலவே திரவக் கசிவும் ஏற்படுவதுண்டு. இது பொதுவாக மக்கியுலா என்ற பகுதியில் சேர்ந்து அதை வீங்கச் செய்யும்.

இதை macula edema என்பார்கள். கூரிய பார்வைக்கு அவசியமான மக்கியுலாவில் இவ்வாறு வீக்கம் ஏற்பட்டால் பார்வை மங்கும்.

நீரிழிவு நோய் மற்றும் கொலஸ்டரோலால் இரத்தக் குழாய்கள் அடைபடலாம். அடைபட்டவற்றை ஈடுசெய்வதற்காக புதிய இரத்தக் குழாய்கள் வளரும். இதுவும் பார்வைப் பாதிப்பை ஏற்படுத்தும். இவ்வாறு நடப்பதை Proliferative retinopathy என்பார்கள்.

**அறிகுறிகள்**

ஆரம்ப கட்டத்தில் நீரிழிவு விழித்திரை நோயானது எந்த ஒரு அறிகுறிகளையும் வெளிப்படுத்தாது. வலியோ வேதனையோ பார்வைக் குறைபாடோ நோயாளிக்கு இருக்காது. ஆயினும் நோயின் தாக்கம் அதிகரிக்கும்போது பார்வை சற்று மங்கலாகலாகும்.

இரத்தக் கசிவு ஏற்படும்போது கரும்புள்ளிகள் பார்வையில் தோன்றலாம். அவை தானகவே மறையவும் கூடும். ஆயினும் மீண்டும் வரும். கடுமையாக குருதிக் கசிவு இருந்தால் பார்வையில் பெரும் பகுதி படத்தில் காட்டியபடி கருமை படர்ந்து மூடக் கூடும்.

எனவேதான் நீரிழிவு நோயுள்ளவர்கள் அறிகுறிகள் தோன்றும் வரை காத்திருக்காது வருடம் ஒருமுறையாவது கண் மருத்துவரைக் காண்பது அவசியம்.

**சிகிச்சை**

சிகிச்சையைப் பொறுத்தவரையில் நீரிழிவை பூரண கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதே மிக முக்கியமானது. நீரிழிவை கண்காணிக்கும் தனது மருத்துவரை 1 முதல் 3 மாதத்திற்கு ஒரு முறையும், கண் மருத்துவரை வருடம் ஒருமுறையாவது கலந்து ஆலோசிக்க வேண்டும்.

நோயின் தாக்கம் அதிகமாகும்போது லேசர் சிகிச்சை

(20ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**ப**டங்களின் மூலம் ஒரு கலைஞன் பிரபலமாவதும், பிரபல கலைஞர்களால் சில படங்கள் வெற்றியடைவதும் திரைத்துறையில் வழக்கம். 'காக்கா முட்டை' திரைப்படத்தில் இந்த இரண்டும் நடந்திருப்பது சிறப்பு. தனுஷ், வெற்றிமாறனால் உருவாகி உலகெங்கும் சுற்றிவந்த காக்கா முட்டை திரைப்படத்தின் மூலம் இன்று அவர்கள் பெருமையடைந்திருக்கின்றனர்.

சென்னையிலுள்ள கூவத்தின் அருகே குடிசைப்பகுதியில் வசிக்கும் இரண்டு சிறுவர்களின் 'பீட்சா' சாப்பிட வேண்டும் என்ற கனவு தான் கதை. ஆனால் அவர்களின் கனவின் பின் பறந்துவிரியும் நிஜ உலகின் முகங்கள் தான் எத்தனைக் கொடூரம். 'வெறும்' 300 ரூபாய் பீட்சா என்று சொல்லக் கூட தயக்கமாய் இருக்கும் இந்த படத்தை பார்த்த பிறகு.



# காக்கா முட்டை ஒரு பார்வை!

பீட்சா வாங்க முந்நூறு ரூபாய் சேர்க்க அவர்கள் கஷ்டப்படும் விதம் படம் பார்ப்பவர்களையும் இனி குறைவாக செலவு செய்ய வைக்கும். அந்த பணத்தை சேர்த்த பிறகும் 'பீட்சா' கடை வாசலில் அவர்கள் நிராகரிக்கப்படும் வேதனையும், வலியும் சமூகத்தின்



கன்னத்தில் விழும் அறை.

படத்தின் முடிவில் அவர்கள் பீட்சா சாப்பிட்டார்களா? இல்லையா? எனச் சந்தேகம் தேவையில்லை. சாப்பிட்டார்கள். சாப்பிட்ட பின் அவர்கள் செய்யும் சேட்டை கதைதட்டல்களின் பேரலைக்கு தகுதியான ஒன்று. கிடைத்ததை வைத்து உலகையே வென்றது போல் கொண்டாடி மகிழும் சிறுவர்களுடன் சிறுவர்களாய் நம்மையும் கொண்டாட வைக்கிறார் இயக்குனர் மணிகண்டன்.

சுகாதாரமான உணவு, ஒரு எல்லைக்குள் மட்டுமே விளையாட்டு என அடங்கி ஒடுங்கி இருக்கும் சிறுவனிடம் எல்லாம் இருந்தும் எதுவும் இல்லை. ஆனால் ஊரெங்கும் சுற்றித்திரியும் காக்கா முட்டைகளிடம் உலகமே இருக்கிறது என யதார்த்தத்தை படம் முழுக்க சொல்லியிருக்கிறார்.

'நாங்க பீட்சா சாப்பிடாவிட்டாலும் பரவாயில்ல, எச்சில் பீட்சா வேண்டாம்' என்று தம்பியை அழைத்துச் செல்லும்



காட்சி காசுக்கு பஞ்சமே தவிர எங்களிடம் சுயமரியாதைக்கு பஞ்சமில்லை என்பதை விளக்குகிறது. பீட்சா கடை கட்டுவதற்காக காக்கா முட்டையை திருடித் தின்னும் மரத்தை வெட்டும் காட்சியில், சிறுவர்கள் முகத்தில் சொந்த வீட்டை இடிக்கும் சோகத்தை வரவழைக்க இயக்குனர் என்ன கஷ்டப்பட்டாரோ? எல்லா புகழும் அவருக்கே.

பாதிக்கப்பட்ட சிறுவர்களை பகடையாக்கி அரசியல்வாதியும், மீடியாவும் தன்னலத்தோடு நடத்தும் விளையாட்டை பகிரங்கமாக சொல்லியிருக்கும் இயக்குனர், இன்றைய விஞ்ஞான வளர்ச்சியினால் 'பேஸ்புக்', 'டுவிட்டர்' போன்ற சமூக வலைதளங்களில் இயங்குபவர்களின் முக்கியத்துவத்தை சொல்லவும் தவறவில்லை.

பெரிய காக்கா முட்டை, சின்ன காக்கா முட்டை ஆகிய இருவர்களில் சின்ன காக்கா முட்டையான ரமேஷ் தான் அதிகம் கைதட்டல் வாங்கிறார். அதற்காக விக்னேஷிடம் திறமை இல்லை என்று சொல்லிவிட முடியாது. சேட்டைகளினால் ரமேஷ் அதிகம் மனதில் நிற்க, தம்பியின் ஆசைக்காக உழைக்கும் பொறுப்பான அண்ணனாக விக்னேஷ் மனதில் நிற்கிறார்.

இரண்டு பிள்ளைகளுக்கு தாயாக நடிக்க ஐஷ்வர்யாவுக்கு அசாத்திய தைரியம் இருந்ததென்றால், அந்த கதாபாத்திரத்திற்காக 5 கிலோவுக்கு மேல் எடை குறைத்து கச்சிதமாய் நடித்ததற்கு அவருக்கு ஒரு 'சல்யூட்'. எத்தனை படம் நடித்தாலும் ஐஷ்வர்யாவுக்கு 'காக்கா முட்டை' ஒரு தங்க முட்டை தான். அவருக்கு மட்டுமல்ல, காக்கா முட்டை படக் குழுவிற்கும் தமிழ் சினி மாவிற்கும் இது தங்க முட்டை தான்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவ்வார இராசி பலன்

**10.06.2015 ~16.06.2015**

**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்**

**மேஷம்** உடல்நலத்தில் ஆரோக்கியம் மேம்படும். திட்டமிட்ட பணியை நிறைவேற்றுவீர்கள். உறவினர்களின் வருகை, வீட்டில் மகிழ்ச்சி தரும். புத்திரர்களின் செயல்பாட்டிலுள்ள குறைகளை சரிசெய்ய வேண்டி வரும். வழக்கு, விவகாரத்தில் அனுகூலத் தீர்வு கிடைக்கும். இல்லறத் துணை, கருத்து ஒற்றுமை கொள்வார். தொழில், வியாபாரத்தில் அளவான பணவரவு கிடைக்கும். பணியாளர்களுக்கு, வேலைப்பளு அதிகரிக்கும். பெண்களுக்கு, நற்பெயர் கிடைக்கும். மாணவர்கள், படிப்பில் கவனம் கொள்வர்.

**கார்த்திகை 2, 3, 4ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்**

**ரிஷபம்** நண்பரால் உதவி உண்டு. குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். செலவில் சிக்கனம் பின்பற்ற வேண்டும். வாகனத்தில் பராமரிப்பு தேவைப்படும். புத்திரர்கள் விரும்பிய பொருளை வாங்கித் தருவீர்கள். சிரமங்களை மன உறுதியுடன் சரி செய்வீர்கள். இல்லறத் துணையின் ஆறுதல் வார்த்தை, நம்பிக்கை தரும். தொழில், வியாபாரம் சுமாரான அளவில் இருக்கும். பணியாளர்கள், நிர்வாகத்தின் சட்ட திட்டங்களை மதித்து செயல்படவும். பெண்கள், உறவினர்களுடன் இணக்கமாக இருப்பர்.

**மிருகசீரிடம் 3, 4ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

**மிதுனம்** அதிக உழைப்பால் பணவரவு திருப்திகரமாகும். குடும்பத் தேவைகளை பூர்த்தி செய்வீர்கள். பேச்சு, செயல், நேர்மை வழியில் இருக்கும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். புத்திரர்களின் நற்செயல், பெருமை தேடித்தரும். எதிரிகள் கூட உங்களிடம் அன்பு கொள்ளும் சூழல் உருவாகும். இல்லறத் துணை வழிசார்ந்த உறவினரால், உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் லாபம் கூடும். பணியாளர்கள் சேமிக்கும் அளவுக்கு பணப்புழக்கம் இருக்கும்.

**புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்**

**கடகம்** சொல்லும், செயலும் வசீகரமாகும். புதியவர்களின் நட்பு கிடைக்கும். வாகன பயணம் இனிதாக அமையும். புத்திரர்கள், உற்சாக மனதுடன் செயல்படுவர். புதிய வீடு, வாகனம் வாங்க அனுகூலம் உண்டு. உடல்நலம் ஆரோக்கியம் பெறும். இல்லறத் துணை, உங்கள் கருத்துகளை ஏற்றுக் கொள்வார். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி ஏற்படும். பணியாளர்கள் சிறப்பாக பணிபுரிந்து, அதிகாரிகளிடம் நற்பெயர் பெறுவர். பெண்கள், பிள்ளைகளின் எதிர்கால நலனில் அக்கறை கொள்வர்.

**சிம்மம்** **மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதம்**

முயற்சி முழு அளவில் நிறைவேறும். தங்கையின் அன்பு, நெகிழ்ச்சி தரும். வீடு, வாகனத்தில் கூடுதல் பாதுகாப்பு பின்பற்ற வேண்டும். புத்திரர்கள், பிடிவாத குணத்துடன் செயல்படுவர். நேரம் தவறாமல் உண்பதால், ஆரோக்கியம் சீராக இருக்கும். இல்லறத் துணை விரும்பிய பொருளை, வாங்கித் தருவீர்கள். தொழில், வியாபாரம் வளர புதியவர்கள் ஆதரவு தருவர்.

**உத்திரம் 2, 3, 4ஆம் பாதங்கள், அத்தம் 1, 2 ஆம் பாதங்கள்**

**கன்னி** பணிகளில் தைரிய மனதுடன் ஈடுபடுவீர்கள். உடன்பிறந்தவர்களின் எண்ணங்களை புறக்கணிக்க வேண்டாம். வாகன பராமரிப்பு செலவு அதிகரிக்கும். புத்திரர்களின் பேச்சும், செயலும் சிறப்பாக அமையும். எதிரிகள் விலகிப் போகிற நிலை உண்டாகும். இல்லறத் துணையின் ஒத்துழைப்புடன் பணவசதியைப் பெருக்குவீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை செழிக்கும். பணியாளர்கள் பாராட்டு, சன்மானம் பெறுவர்.

**சித்திரை 3, 4ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

**துலாம்** மனதில் நம்பிக்கை வளரும். ஆர்வமுடன் பணிபுரிவீர்கள். பேச்சில் நியாயம், தர்மம் இருப்பினும், இடம், பொருள் உணர்ந்து பேசுங்கள். வீடு, வாகனத்தில் உரிய பாதுகாப்பு வேண்டும். புத்திரர்களின் நற்செயலை ஊக்கப்படுத்துவீர்கள். கஷ்டமான சூழல் விலகும். இல்லறத் துணையின் செயலில் குறை கண்டுபிடிப்பதை தவிர்க்கவும். தொழில், வியாபாரம் சுமாரான லாபம் தரும். பணியாளர்கள், குறிப்பிட்ட காலத்திற்குள் இலக்கை நிறைவேற்றுவர். பெண்கள், பொறுமையாக இருக்க வேண்டும். மாணவர்கள், படிப்பில் சிறந்து விளங்குவர்.

**விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

**விருச்சிகம்** சுப நிகழ்ச்சிகளை பேசி முடிக்க, அனுகூல சூழல் உருவாகும். பேச்சில் கடுமையை குறைப்பதே உடலுக்கும், மனதுக்கும் நல்லது. உறவினர் வருகையால், செலவு அதிகரிக்கும். புத்திரர்களிடம் அனுசரித்து நடப்பதன் மூலமே, அவர்களின் அன்பைப் பெற முடியும். இல்லறத் துணை இன்ப, துன்பத்தில் பங்கு கொள்வார். தொழில், வியாபாரத்தில் இடையூறு இருந்தாலும், தாமதமின்றி சரிசெய்து விடுவீர்கள். பணியாளர்கள், கடன் வாங்கும் சூழ்நிலை உண்டு. பெண்கள், குடும்ப முன்னேற்றத்திற்காக செலவை குறைப்பர்.

**மூலம், பூராடம், உத்திராடம் 1ஆம் பாதம்**

**தனுசு** சாதனை நிகழ்த்தும் எண்ணத்துடன் செயல்படுவீர்கள். புகழும், பணமும் கிடைக்கும். சேமிப்பு கூடும். தம்பி, தங்கைகளின் திருமண பேச்சு முன்னேற்றம் பெறும். புத்திரர்களின் செயல்திறன் அதிகரிக்கும். அறிமுகம் இல்லாதவருக்கு வீடு, வாகனத்தில் இடம் தர வேண்டாம். இல்லறத் துணை, நல்ல ஆலோசனை சொல்வார். தொழில் நடைமுறையில் சில மாற்றங்களை செய்வீர்கள். பணியாளர்களுக்கு, சலுகை கிடைக்கும்.

**திருவோணம், அவிட்டம்1,2ஆம்பாதங்கள்**

**மகரம்** வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். பணவரவு சுமாராக இருக்கும். புத்திரர்களின் எதிர்காலம் சிறக்க, கடும் முயற்சி மேற்கொள்வீர்கள். உடல்நலத்திற்கு ஒவ்வாத உணவை உண்ண வேண்டாம். இல்லறத் துணையின் நம்பிக்கைக்கு பாத்திரமாவீர்கள். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை சுமாராக இருக்கும். பணியாளர்களுக்கு, ஓரளவு சலுகை கிடைக்கும். பெண்கள், பிற ஆண்களிடம் கவனமாக இருக்க வேண்டும். மாணவர்கள், பொறுப்புணர்வுடன் படித்து, நற்பெயர் பெறுவர்.

**அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள்**

**கும்பம்** பயணத்தில், பாதுகாப்பு வழிமுறைகளை தவறாமல் பின்பற்ற வேண்டும். புத்திரர்களின் சிந்தனையில் நல்ல மாற்றம் ஏற்படும். சொத்து பராமரிப்பில், நம்பகமானவர்களுக்கு மட்டும் இடம் தர வேண்டும். இல்லறத் துணையின் உடல்நிலைக்காக, மருத்துவ செலவு வர வாய்ப்புண்டு. தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள், மற்ற பணியாளர்களுடன் கருத்து வேறுபாடு கொள்வதைத் தவிர்ப்பது நல்லது. பெண்கள், ஆன்மிக சுற்றுலா சென்று வருவர். மாணவர்கள், லட்சிய மனதுடன் படித்து முன்னேறுவர்

**பூரட்டாதி 4ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

**மீனம்** குடும்பத்தில் மங்கல நிகழ்வு உண்டாகும். புத்திரர்கள் அறிவுத்திறனில் மேம்பட்டு, பெருமை தேடித் தருவர். கடன்ன அடைக்க வாய்ப்பு கிடைக்கும். இல்லறத் துணையின் கருத்துக்கு முக்கியத்துவம் தருவீர்கள். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். பணியாளர்கள் கவனமாக பணிபுரிந்து, அதிகாரிகளிடம் நற்பெயர் பெறுவர். பெண்களின் சிந்தனையில் தெளிவு பிறக்கும். மாணவர்களுக்கு, படிப்புக்கான பணவசதி தாராளமாக கிடைக்கும்.

# சுதந்திர வேட்கை

## விடுதலைப் போராட்டம் பற்றிய ஒரு பதிவு 89

அடேல் பாலசிங்கம்



உச்சி மாநாட்டு அரங்கத்தைப் பயன்படுத்தி, ஆயுதம் தரித்த தமிழ் விடுதலை அமைப்புகளுக்கு இந்தியா மறைமுகமாக வழங்கும் ஆதரவை பயங்கர வாதத்துக்கு இந்தியா வழங்கும் ஆதரவாகக் குறிப்பிட்டு நீண்டதொரு உரையை அவர் நிகழ்த்தினார்.

தீர்வு காண அடிப்படையாக முன் வைக்கப்பட்ட அரசியல் யோசனைகளை விடுதலைப்புலிகள் முற்றுமுழுதாக நிராகரித்திருந்தார்கள். இதனால் இந்திய அரசு பெரும் மனக்கசப்புக்கு உள்ளாகி இருந்தது. விடுதலைப்புலிகளுடனான இந்திய உறவு மேலும் விரிசல் அடைவதற்கு இதுவும் ஒரு காரணமாகியது. இந்திய அரசினரும் வெவ்வேறு புலனாய்வுப் பிரிவினரும் விடுதலைப்புலிகள் மீது தமது அதிருப்தியை தெளிவாக உணர்த்த முடிவு செய்தனர். விடுதலைப்புலிகளும் சரி ஏனைய போராளிக்குழுக்களும் சரி தொடர்ந்து இந்தியாவில் இயங்க முடியாது என்று அவர்களுக்கு உறைக்கும் படி செய்யத் தீர்மானித்தனர். தமிழ் நாடு புலனாய்வுப் பிரிவுகள் மற்றும் காவல்துறை ஆகியவற்றின் துணையோடு விடுதலைப்புலிகளின் தொலைத் தொடர்பு சாதனங்களைக் கைப்பற்றும் இரண்டாவது மிக முக்கிய நடவடிக்கையை இந்திய அரசு மேற்கொண்டது.

பங்களூர் அரசியல் யோசனைகளை விடுதலைப்புலிகள் நிராகரித்தமையிட்டு இந்தியா ஆத்திரம் கொண்டிருக்கிறது என்பதை உணர்த்துவதற்காக பிரபாகரன் தொலைத்தொடர்பு சாதனங்களை இந்தியா பறிமுதல் செய்தது. இது விடுதலை புலிகளுக்கும் புதுடில்லிக்கும் இடையே நிலவிய உறவு மீது ஒரு பேரிடியாக அமைந்தது. இந்தியாவின் உள்ளார்ந்த எண்ணங்கள் தொடர்பாக பிரபாகரன் கொண்டிருந்த மதிப்பீட்டுச் சிகரம் வைத்தால் போல இந்த நடவடிக்கை அமைந்தது. அவரைப் பொறுத்த வரையில் இந்தியா தொடர்பான அனைத்து விடயங்களிலும் ஓர் ஆழமான அவ நம்பிக்கையை அவர் மனதிலே பதித்தது.

பங்களூர் பேச்சுவார்த்தையின் முறிவு இந்தியாவுக்கு அதிருப்தியை தோற்றுவித்திருந்தது என்பதை பாலாவும் பிரபாகரனும் உணர்ந்தே இருந்தார்கள். இந்தியாவின் அரசியல் தீர்வு எதிர் பார்ப்புகள் அவர்களுக்குப் பலத்த ஏமாற்றத்தையும் அயர்வையும் ஏற்படுத்தியிருந்தன. வடக்கும் கிழக்கும் பிரிக்க முடியாத ஒரே தமிழ்ப் பிரதேசமாக அங்கீகரிக்கப்பட வேண்டும் என்ற வேணாவாகக் கொண்டிருந்த இவர்களுக்கு கிழக்கு மாகாணத்தை- முக் கூறுகளாக்க முனைந்த யோசனை எள்ளளவேனும் ஏற்க முடியாத திட்டமாக இருந்தது.

**(பதிவு தொடரும்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயம் காக்கும் காய்கறிகள்

**கா**ய்கறிகளில் உயிர்ச்சத்துகளும், ஊட்டச்சத்துகளும் அடங்கியுள்ளன. அவற்றிலுள்ள தாவர வேதிப்பொருட் கள், நெடுநாள் நோய்களான புற்றுநோய், இருதய நோய்கள் மற்றும் நீரிழிவு போன்றவற்றைத் தடுக்கும் திறன் கொண்டவை ஆகும். 'செரிபரோ வாஸ்குளார்' நோயால் ஏற்படும் இறப்பிற்கும், பழங்கள் மற்றும் காய்கறிகள் உட்கொள்ளும் அளவிற்கும் எதிர்மறை யான தொடர்பு காணப்படுகிறது.

மனிதனின் உடல் அமைப்பு ஒரே தாவர வேதிப்பொருளைக் காட்டிலும், பல்வேறு பழங்கள் மற்றும் காய்கறிக் கலவையில் இருந்து கிடைக்கும் பலவகை வேதிப் பொருட்கள் உடலை நன்கு காத்துப் பராமரிக்கின்றன. பொதுவாக நாம் காய்கறிகளை உணவில் சேர்த்து வருகிறோம். அதன் மூலம் உடலுக்குத் தேவையான ஊட்டச்சத்து தாராளமாய் நமக்குக் கிடைக்கிறது. ஆனால் அதே சமயம் வேர்க் காய்கறிகளை அதிக அளவில் உட்கொள்வதால் சாதாரண காய்கறிகளில் இருந்து கிடைக்கும் சத்துக்களை விட, அதிகமாக நம்மால் பெறமுடிகிறது.

இவை ஊட்டச்சத்துக்கள் மட்டுமல்லாமல் நமது உடலில் உண்டாகும் பலவிதப் பிரச்சனைகளையும் தீர்க்க வல்லது.

### இதயம் காக்கும் 'டர்னிப்'

'டர்னிப்' சாலட்டில் சேர்க்கக்கூடிய ஒரு சிறப்பான காய்கறி. அதிலும் முக்கியமாக இந்த டர்னிப் இதயத்திற்கு ஆரோக்கியத்தைத் தரக்கூடிய ஒரு வேர்க் காய்கறி. இதில் இதயத்தைக் காக்கக் கூடிய மருத்துவப் பொருள்கள் அதிகமான அளவில் அடங்கியுள்ளன.

### எடையைக் குறைக்கும் உருளைக்கிழங்கு

உருளைக்கிழங்கில் மாச்சத்து நிறைய உள்ளது. மேலும் இவை உடலுக்கு அதிகப்படியான ஆற்றலையும் கொடுக்கக்கூடியவை. ஆனால் உடல் எடையைக் குறைக்க நினைத்தால், இதனை உணவுக்கட்டுப்பாட்டில் சேர்க்கக்கூடாது.

### நோய் எதிர்ப்புச் சக்தியளிக்கும் வெங்காயம்

வெங்காயத்தில் 'அன்டி - பாக்டீரியா' மற்றும் நோயெதிர்ப்பு அழற்சிப் பொருள் அதிகம் நிறைந்துள்ளதால், அவை நோய்த்தொற்றுகளை எதிர்த்துப் போராடும். மேலும் இதில் ஜிங்கு உள்ளதால், ஆண்களின் ஓமோன்களின் செயல்பாடுகளை அதிகரிக்கும்.

### இருமல் போக்கும் இஞ்சி

இஞ்சியில் செரிமான நொதிகள் நிறைந்திருப்பதால் அவை அசிடிட்டி பிரச்சனை உள்ளவர்களுக்கு மிகவும் சிறந்தது. குறிப்பாக இருமல், சளி மற்றும் தொண்டையில் தொற்று உள்ளவர்களுக்கு இஞ்சி நல்ல நிவாரணத்தைக் கொடுக்கும்.

### சருமம் காக்கும் கரட்

கரட் சாப்பிட்டால் கண்களுக்கு மிகவும் நல்லது ஏனெனில் இதில் கண்களுக்கு ஆரோக்கியத்தைத் தரும் விற்றமின் ஏ அதிகம் உள்ளது. மேலும் இதனை நாள்தோறும் சாப்பிட்டால், சருமம் பொலிவாக இருக்கும்.

### சர்க்கரைநோய் போக்கும் முள்ளங்கி

நீரிழிவு நோயாளிகளுக்கு முள்ளங்கி ஒரு சிறப்பான உணவுப் பொருள். ஏனென்றால் இதில் கிளைசீமிக் இன்டெக்ஸ் மிகவும் குறைவாக உள்ளது. மேலும் இதில் பொட்டாசியம் அதிக அளவில் நிறைந்துள்ளதால் இரத்த அழுத்தத்தைச் சீராக வைக்கும்.

### நரம்புப் பிரச்சனை தீர்க்கும் சேனைக்கிழங்கு

சேனைக்கிழங்கில் மாச்சத்து அதிகம் நிறைந்துள்ளது. மேலும் இதில் விற்றமீன் - பி அதிகம் இருப்பதால், அவை நரம்புகளை ஆரோக்கியமாக வைத்துக்கொள்ள உதவியாக இருக்கும்.

### ஆற்றல் அதிகரிக்கும் சர்க்கரைவள்ளிக்கிழங்கு

சர்க்கரைவள்ளிக் கிழங்கில் உடலுக்கு வேண்டிய ஆற்றல் அதிகம் இருப்பதோடு உருளைக்கிழங்கைவிடக் குறைவாகவே மாச்சத்து உள்ளது. மேலும் இதில் விற்றமின் பி அதிகம் இருப்பதால், இன்சுலின் சுரப்பைச் சீராக வைக்கும்.

## நீரிழிவினால்...

(17ஆம் பக்கத் தொடர்ச்சி)

அளிப்பார்கள். இரத்தம் அதிகம் கண்ணினுள் கசித்திருந்தால் அங்குள்ள இரத்தம் கலந்த திரவத்தை அகற்றிவிட்டு வேறு உப்புத் திரவத்தை மாற்றீடு செய்வதுண்டு. இதனை vitrectomy என்பார்கள்

**கற்றரக்ட்**

கற்றரக்ட் என்பது கண்வில்லை வெண்மையடைந்து பார்வையைக் கெடுப்பதாகும். வெண்புரை நோய் என்றும் சொல்லப்படுகிறது. இந்த வெண்புரை நோயானது வயதாகும் காலத்தில் எவருக்கும் வரக் கூடிய ஒன்றே. இருந்தபோதும் நீரிழிவு நோயாளர்களுக்கு குறைந்த வயதிலேயே வந்து பார்வையை மறைப்பதும் உண்டு.

**குளுக்கோமா**

குளுக்கோமா என்பது கண்ணின் உட்புறம் உள்ள அழுத்தம் (pressure) அதிகரித்து அதனால் பார்வை நரம்பு பாதிப்புறுவதாகும். இதுவும் யாருக்கும் ஏற்படக் கூடுமாயினும் நீரிழிவு உள்ளவர்களை ஏனையவர்களை விட இரு மடங்கு அதிகமாகப் பாதிக்கிறது என்பது குறிப்படத்தக்கது.

**இறுதியாக**

இந்த நோய்கள் எல்லாம் ஒருவருக்கு வந்தால் கண் பார்வையை முழமையாகப் பழைய நிலைக்குக் குணமாக்குவது சிரமம். பார்வை மேலும் மோசமடைவதைத் தடுப்பதாகவே இருக்கும். எனவேதான் காலக்கிரமத்தில் கண்மருத்துவரைச் சந்தித்து கண் பரிசோதனை செய்வது அவசியமாகும்.

எனக்கு கண் நல்லாத் தெரியுது என்று கூறியவருக்கும் விழித்திரையில் பாதிப்பு ஏற்பட்டிருந்தது. ஆரம்ப நிலை என்பதால் பாரிய சிகிச்சைகள் தேவைப்படவில்லை.

நீரிழிவு உள்ளவர்கள் தங்கள் குருதியின் சீனி அளவை கணிப்பதுடன் திருப்தியடைந்து விடக் கூடாது. கொஞ்சம்தானே அதிகமாக இருக்கு என அசட்டையாக இருக்கவும் கூடாது. ஏனெனில் நீரிழிவால் ஏற்படும் பாதிப்பு என்பது வெறும் குருதிச் சீனியின் அளவு அல்ல. கட்டுப்பாட்டில் இல்லாத நீரிழிவானது சிறுநீரகம், நரம்புகள், இரத்தக் குழாய்கள், இருதயம், கண் என உடலில் உள்ள ஒவ்வொரு உறுப்புகளையும் சதாகாலமும் பாதித்துக் கொண்டே இருக்கிறது.

தங்களுக்கு ஏதாவது பாதிப்பு இருக்கிறதா என்பதை நேரகாலத்துடன் கண்டறிந்தால் அவை மேலும் மோசமடைவதைத் தடுக்க முடியும். ஆரம்ப நிலையில் நீரிழிவைக கண்டுபிடிப்பதும் அதனை பூரண கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதால் பாரிய பாதிப்புகள் ஏற்படாது தவிர்த்துக் கொள்ளலாம்.

## செம்மரங்கள்...

(9ஆம் பக்கத் தொடர்ச்சி)

காலத்தில், மரத்தை ஏமாற்ற முடியவில்லை.

கண்ணனுடைய புல்லாங்குழல் இசையைக் கேட்டு மரங்கள் மயங்கியதை தனது 284ஆவது பாசுரத்தில் பெரியாழ்வார் அதிஅற்புதமாக எடுத்துரைக்கிறார்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இசைமுரசு எம்.எம். தண்டபாணி தேசிகர் இசைக் கல்லூரிப் பேராசிரியராக இருந்தபோது, இசைக் கல்லூரியைச் சுற்றியிருந்த மரங்கள் வெகு வேகமாக (மற்ற இடங்களில் இருக்கும் மரங்களைக் காட்டிலும்) வளர்ந்ததாகத் தாவரவியல் பேராசிரியர்கள் கண்டறிந்தார்கள்.

மரங்கள் நம் வாழ்வோடு இணைந்தவை. தொன்றுதொட்டு நம்முடைய இல்லத் திருமணங்களில், மூன்று நாள்களுக்கு முன்பாகப் பந்தக் கால் (அரசாணிக்கால்) நடுவார்கள். அப்படி நிறுத்தப்பட்ட மரங்களைத் திருமணம் முடிந்த அன்று மாலை, பெண்ணும், மாப்பிள்ளையும் அந்த அரசாணிக் காலைக் கொண்டுபோய், மாப்பிள்ளை வீட்டாரின் கொல்லைப்புறத்தில் நடுவார்கள். அந்த மரத்தின் வளர்ச்சியைப் போல, அவர்கள் வாழ்க்கை தழைக்கும் என்பது நம்பிக்கை.

திருக்கோயிலுக்குச் சென்று மூலவரை வணங்குவதற்கு முன்பு தலவிருட்சத்தை வணங்கிவிட்டுத்தான் பிற வழிபாடுகள். ஒவ்வொரு கோயிலுக்கும் ஒரு தல விருட்சம் உண்டு. மரங்களையே தெய்வமாக வணங்குகின்ற பாரம்பரியம் நமக்குண்டு. ராமா என்ற சொல்லை உச்சரிக்கத் தெரியாத வேடன் வான்மீகி, மராமரத்தின் பெயரை உச்சரித்து அல்லவா முனிவரானார்.

இன்றைக்குத் திருப்பதியில் இருக்கின்ற சேஷாசலத்தில்தான் செம்மரங்களும், மலை மனிதர்களும் வெட்டப்படுகிறார்கள். ஆனால், அந்தத் திருவேங்கடத்தில்தான் குலசேகர ஆழ்வார், அடுத்த பிறவியில் செண்பக மரங்களாய் பிறக்க வேண்டுமென்று வேங்கடவனை வேண்டுகிறார்.

மரங்கள் ஞானத்தைப் போதிக்கும் மனிதர்களாக நமக்குப் பயன்பட்டு வருகின்றன. அசோக சக்கரவர்த்தியின் மகள் சங்கமித்ரா பெத்த மதத்தைப் பரப்புவதற்கு இலங்கைக்குச் சென்ற போது, போதி மரத்தின் ஒரு கிளையை இங்கிருந்து வெட்டிக் கொண்டுபோய் அங்கு நட்டிருக்கிறார். 'பண்ணிய புண்ணியம் பயிரில் தெரியும்' எனும் ஔவைப் பாட்டியின் அறிவுரையை அனுசரித்தே நம்மவர் வாழ்ந்திருக்கின்றனர்.

வாழ்க்கையைச் சித்திரிப்பதற்குச் சங்கப் புலவர்களுக்கு மரங்கள்தாம் கைக்கொடுத்திருக்கின்றன. பாலை பாடிய பெருங்கடுங்கோ பாலைக்கலி 9ஆம் பாட்டில் (கலித்தொகை) யதார்த்த வாழ்க்கையைத் திட்பமாகவும், நுட்பமாகவும் தீட்டிக் காட்டுகிறார்.

பாலைவனத்தில் ஒரு மரம் பட்டுப் போய் நிற்கிறது. அது எவ்வாறு பட்டுப் போயிருக்கிறது என்றால், இளமைக் காலத்தில் ஒருவனுக்கு வறுமை வந்தால் எப்படித் தரித்திரப்பட்டு நிற்பானோ அப்படிப் பட்டுப்போயிருக்கிறது என்றார்.

அந்த மரம் ஓலைகள் இன்றி நிற்பது எப்படியிருக்கிறது என்றால், கயவனிடம் செல்வம் சேர்ந்தால், அவன் தன்னிடம் யாரையும் நெருங்கவிடாமல் இருப்பது போல் நின்றதாம். மேலும், அம்மரம் எல்லாவற்றையும் உதிர்த்துவிட்டுக் கருகி நிற்பது எவ்வாறு இருக்கிறதென்றால், அதிகாரத்தின் உச்சிக்குப் போய் எல்லோரையும் கொடுமைப்படுத்திக் கெட்ட பெயர் தேடிக்கொண்ட ஆட்சியாளனைப் போல் நின்றதாம்.

வாழ்க்கையைச் சித்திரிப்பதற்குக் கைக்கொடுத்த மரங்களின் கைகளையும், கால்களையும் வெட்டலாமா?

வாழ்க்கையைக் கற்பிக்கும் மரங்களை வெட்டுபவர்களுக்குப் புத்தி புகட்ட விந்தன் ஓர் உருவகக் கதை சொன்னார். ஒரு மரத்தை வெட்டுவதற்கு ஒருவன் கோடரியை ஓங்குகிறான்.

அப்படி ஓங்குபவனை விட்டுவிட்டுக் கோடரியைப் பார்த்து மரம் பேசுகிறது,

'ஏ கோடரியே, உன்னை ஏந்தி நிற்கும் மனிதனுக்குத்தான் நன்றியில்லை. இந்த மரம்வெட்டி, சென்ற மாதம்தானே என்னிலிருந்து ஒரு கிளையை வெட்டிப் போய், இப்போது கோடரிக் காம்பாக உன்னைப் போட்டிருக்கிறான். என்னிலிருந்து போன உனக்குமா நன்றியில்லாமல் போயிற்று? தாயின் வயிற்றையே கிழிக்கலாமா' என மரம் கேட்டது.

அதற்குக் கோடரிக் காம்பு,

'தாயே நான் உன் வயிற்றில் இருக்கும்வரை நன்றியோடுதான் இருந்தேன். ஆனால், எப்பொழுது இந்த மனிதனின் கை என்மேல் பட்டதோ, அப்பொழுதிலிருந்து நன்றியைக் கொல்லத் தொடங்கிவிட்டேன், என் இனத்தையே அழிக்கவும் முற்பட்டேன்'

என்று சொன்னதைக் கேட்ட மரம் வெட்டி, நாணித் தலைக் குனிந்தான் என விந்தன் எழுதுவார்.


மரங்கள் மனித வாழ்க்கைக்கு உரங்கள். வேண்டியதை நல்கும் வரங்கள். செம்மரங்கள் கண்ணீர் சிந்துவது தமக்காக அல்ல, நமக்காகவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரை திருமணம் செய்து கொள்ள தினமும் சென்னை வரும் பெண்கள் எண்ணிக்கை அதிகம். அதிலும் தங்களது ஜமீந்தார் தந்தையுடன் வரும் பெண்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

ரயிலில் இவர் எங்காவது செல்கிறார் என்றால் ரெயில்வே அதிகாரிகளுக்கு சிக்கல்தான். அன்று இவர் செல்லும் ரயில் பல



# நாணல் போல வளைவதுதான்..

இடங்களில் நிறுத்தப்பட்டு குறைந்தது ஐந்து மணி நேரமாவது தாமதமாகத்தான் செல்லும்.

இவரது கார் ஓட்டுநர் காரை துடைக்கவே தேவை இல்லை.

காலைதோறும் இவர் காரின் மீது படிந்துள்ள தூசியை எடுத்து நெற்றியில் பக்தியுடன் பூசிக்கொள்ள ஒரு கூட்டமே காத்துக்கிடக்கும்.

இப்படிப்பட்டவர் மீது சுமத்தப்பட்ட கொலை வழக்கு, தண்டனைக்குப் பின்னர் எல்லாமே மாறிப் போனது.

மூன்று தீபாவளிகளை ஒரே திரையரங்கில் கண்ட படத்தில் நடித்த சூப்பர் ஸ்டார் தியாகராஜ பாகவதர் தான் இந்த இரு நிலைகளையும் கண்டவர்.

அதன் பின்னர் இவர் நடித்த படங்கள் சொற்பம். அனைத்துமே வந்த வேகத்தில் திரையரங்கை விட்டு ஓடின.

இதற்கெல்லாம் காரணம் திரை உலகத்தினரின் அந்தரங்கங்களை வெளியிட்டு காசு பண்ணிய மஞ்சள் பத்திரிகை 'இந்து' நேசன் ஆசிரியர் லட்சுமி காந்தன் வாடகை வாகனத்தில் செல்லும் போது சிலரால் கொலை செய்யப்பட்டதுதான்.

அதற்கு காரணம் தியாகராஜா பாகவதர், கலைவாணர் ஆகியோர்தான் என்று ஒரு கொலை வழக்கு.


அந்த நேரம் இந்து நேசன் பத்திரிகையில் இவர்கள் இருவரையும் பற்றி அசிங்கமாக எழுதப்பட்டிருந்ததுதான் இந்தச் சந்தேகத்துக்கு காரணம்.

வழக்கின் முடிவில் இருவருக்கும் சிறைத்தண்டனை வழங்கப்பட்டது.

அத்துடன் ஒரு கனவுலகச் சக்ரவர்த்தி, 'சூப்பர் ஸ்டார்' தியாகராஜ பாகவதரின் திரையுலக சரித்திரமே முடிவு பெற்றது. சிறிது நாளில் அவரது கண் பார்வையும் போய் வாழ்வும் முடிவு பெற்றது. ஆனால் அவர்கள் இருவரும் இந்தக் கொலையில் சம்பந்தப்படவில்லை என்பதுதான் அவர் கடைசிவரை சொல்லி வந்த உண்மை. ஆனால் சாட்சிகள் இல்லை.

இது அன்றைய நீதித்துறை வரலாறு.

**தேனைக் களவாடியவன் சுதந்திரமாக இருக்கிறான். சிந்திய தேனை என்னவென்று நக்கிப் பார்த்தவன் தூக்கு மேடையை எதிர்பார்த்து நம் நீதித் துறை தேவிதை கண் கறுப்புத்துணியை இறுக்கிக் கட்ட வேண்டும் எனபதைத்தவிர நாம் வேறு என்ன சொல்ல? சொன்னால் அது நீதிமன்ற அவமதிப்பாகி விடுமே?**



சஞ்சய் தத் | சல்மான் கான் | பேரறிவாளன்

இன்று பலத்த சாட்சிகள், படுகொலை செய்யப் பயன்படுத்திய கார் ஆகியவை இருந்தும், குடித்து விட்டு காரைச் செலுத்தி வீதியின் ஓரம் படுத்திருந்தவர்களைப் படுகொலை செய்தது நிரூபிக்கப்பட்டும் பிரபலங்கள் குற்றவாளிக்கு ஆதரவாக செய்தி வெளியிடும் அசிங்கம்.

நடிகர் சல்மான் கானின் 'டொயாட்டோ லேண்ட் குரூயிஸர்' கார், நடைபாதையில் படுத்துத் தூங்கிய ஏழைகள் மீது ஏறி ஒருவரைக் கொன்று நால்வரைக் காயப்படுத்தியது, இது நடந்தது 2002இல். வெறுமனே விபத்து என்று இதைச் சொல்லிவிட முடியாது.

காரை ஓட்டியபோது சல்மான் கான் குடித்திருந்தார்.

குடித்து விட்டு வாகனம் செலுத்தி விபத்துக்குள்ளாக்குபவர்களைக் கொலைக் குற்றத்தில் கைது செய்ய வேண்டும் என்பது ஒரு நீதிபதியே கூறிய வார்த்தைகள்.

அதுதான் சரியானதும் கூட. குடித்து விட்டு காரை ஓட்டுவது தெரிந்தே செய்யும் குற்றம். கொலை முயற்சிதான்.

ஆனால் சல்மான் கான் சம்பவ இடத்திலிருந்து தப்பினார்.

வழக்கை உடைக்க என்னவெல்லாம் செய்ய முடியுமோ எல்லாவற்றையும் செய்தார். பணத்தின் மூலம் எத்தனை சாட்சியங்கள் பிறழ்ந்தன?

எத்தனை ஆவணங்கள் காணாமல்போயின?

வழக்கின் முக்கிய சாட்சியம் காவலர் ரவீந்திர பாட்டிலின் வாழ்க்கை நாசமாக்கப்பட்டதே. வேலை பறிக்கப்பட்டதே. கடைசியில் அவர் இறந்து போனதும் இதே சல்மான் கானின் கொலை பட்டியலில்தானே சேரும்.?

13 ஆண்டுகள் கழித்து, சல்மான் கானின் குற்றத்தை உறுதிசெய்து ஐந்தாண்டுகள் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கிறது நீதிமன்றம். அன்றைய தினமே மேல் முறையீட்டு மனுவை விசாரணைக்கு ஏற்று, கையோடு ஜாமீனையும் அளிக்கிறது. இது போல் எந்த இந்தியக் குடிமகனுக்கும் வழங்கப்படுமா?

ஜெயலலிதா, சல்மான் கான், சஞ்சய் தத் போன்ற சிலர்தானே விலக்கு.

அடுத்தடுத்த நாட்களில் உயர் நீதிமன்றமும் ஜாமீன் அளித்து, தீர்ப்பை நிறுத்திவைக்கிறது.

என்ன வேகம்! ஜெயலலிதா வழக்கில் காட்டப்பட்ட அதே வேகம்.

ஒரு வழக்கை எவ்வளவு மெதுவாக நடத்த முடியும் என்பதைத் தண்டனைக்கு ( 22 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# முதன்முறையாக கவர்ச்சியான சினிமா அழைப்பிதழ்

சினிமாப் படங்களைத் தயாரிக்கும் தயாரிப்பாளர்கள் மற்றும் இயக்குனர்கள் தங்கள் படங்களில் ஏதாவது வித்தியாசம் ஒன்றை காண்பித்து ரசிகர்கள் மற்றும் சினிமா வட்டாரங்களை கவர ஆர்வம் காண்பிப்பார்கள்.

சிலர் தலைப்பில் வித்தியாசம், படத்தில் வித்தியாசம் என புதுப்புது முயற்சி எடுத்து வருகிறார்கள். குறிப்பாக அந்தப் படத்தின் பாடல்கள் வெளியீட்டு அழைப்பிதழில் அதிகம் வித்தியாசம் காண்பிப்பார்கள்.

அந்த வரிசையில் தெலுங்கில் முன்னணி நடிகையாக வலம் வரும் சார்மி 'ஜோதி லட்சுமி' படத்தில் நடித்து வருகிறார். இதில் இவர் விபசார அழகியாக நடித்துள்ளார். இப்படத்தின் சுவரொட்டிகள் மற்றும் முன்னோட்டம் சமீபத்தில் வெளியானது. இது ரசிகர்களை கவர்ந்து வரும் நிலையில், இப்படத்தின் பாடல்கள் வெளியீட்டு அழைப்பிதழை வித்தியாசமாக பெண்ணின் மேலாடையை கழட்டுவது போன்று வடிவமைத்திருக்கிறார்கள். இது சினிமா வட்டாரங்களில் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

'காதல் அழிவதில்லை' படம் மூலம் தமிழில் நடிகையாக அறிமுகமானவர் சார்மி. தெலுங்கில் முன்னணி நடிகையாக இருந்து வருகிறார். இவர் தமிழில் விக்ரம் நடிப்பில் உருவாகிவரும் 'பத்து எண்றதுக்குள்ள' படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார்.



# முகப்புத்தகத்தில்...

(18ஆம் பக்கத் தொடர்ச்சி)

தேர்ந்தெடுக்காமல் இருக்கிறதா என்று உறுதிபடுத்திக் கொள்ளுங்கள் (Be sure the box for public search results isn't checked)

7. மேற்பார்வையில்லாமல் குழந்தைகளை தளத்தை பயன்படுத்த அனுமதிப்பது (Permitting youngsters to use Facebook Unsupervised) இது வரைக்கும் பார்த்ததிலேயே மிகவும் முக்கியமான விடயம் இதுதான்.

அதாவது, முகப்புத்தகத்தை 13 வயது மற்றும் அதற்கு மேற்பட்டவர்கள் மட்டுமே பயன்படுத்தவேண்டும் என்று விதி முறைப்படுத்தி இருந்தாலும், 13 வயதுக்கு குறைவானவர்களும் பயன்படுத்துகிறார்களாம். இவ்வயதுக்குட்பட்ட உங்கள் குழந்தைகள் அல்லது குழந்தைகளும் முகப் புத்தகத்தைப் பயன்படுத்தும் பட்சத்தில், அவர்களை மேற்பார்வையிட மிகவும் சுலபமான வழி, அவர்களின் நண்பர்களில் ஒருவராகச் சேர்ந்து கொண்டு, அவர்களின் தொடர்பு மின்னஞ்சல் பகுதியில் உங்கள் மின்னஞ்சலைக் கொடுத்து, அவர்களுக்கு வரும் தகவல்கள் உங்களுக்கு வரும்படியாக செய்துகொள்வதுதான்.

குழந்தைகள் தங்கள் முகப்புத்தகத்தை தாங்கள் எழுதும் சிலவற்றைப் பெரிதாக எடுத்துக்கொள்வதில்லை என்கிறார். இணையத்தளத்தின் குற்றப்புகார் மைய மேற்பார்வையாளர் சார்லஸ் பேவலிட்ஸ் (Charles Pavelites, a supervisory special agent at the Internet Crime Complaint Center). உதாரணமாக, அம்மா வர நேரம் போயிடுச்சு, நான் சீக்கிரம் வீட்டைச் சுத்தப்படுத்த வேண்டும். இப்படி எழுதும் ஒரு குழந்தை, தினமும் தம் பெற்றோர் அலுவலகம் செல்லும் அல்லது வீடு திரும்பும் ஒரு குறிப்பிட்ட நேரத்தை, தங்களையறியாமலேயே முகப்புத்தகத்தில் குறிப்பிடுகிறார்கள். ஆனால் அது தவறு என்று உணர்வதில்லை என்கின்றார் சார்லஸ். இதில் இருக்கின்ற சாதகமான மற்றும் பாதகமான விடயங்கள் என்ன என்று உங்களுக்கு விளங்கும்.

# நாணல் போல...

(21 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முன்னும், எவ்வளவு விரைவாக நடத்த முடியும் என்பதைத் தண்டனைக்குப் பிறகும் அறிந்துகொள்ள ஜெயலலிதா வழக்குக்குப் பின்னர் நமக்கு இன்னொரு வாய்ப்பை இந்திய நீதித்துறை தந்துள்ளது..

இந்திய நீதித்துறையின் மிகப் பெரிய சாபக்கேடு அதன் தாமதம் என்றால், இந்திய நீதித்துறை மிகக் கடுமை காட்ட வேண்டியவர்கள் அல்லவா வாய்தா பெறுபவர்கள். அவர்கள் தானே ஒரு வழக்கை நீர்த்துப்போக செய்கிறார்கள்?

நீதித் துறைக்குச் சவால் விடும் வகையில், தவணைகளால் வழக்கை இழுத்தடிப்பவர்களில் ஆகப் பெரும் பான்மையினர் செல்வாக்குள்ளவர்கள். ஆனால், அப்படி இழுத்தடிப்பவர்களின் வழக்குகளே தண்டனைத் தீர்ப்புக்குப் பின் சீக்கிரமாக மேல்முறையீட்டுக்கு எடுக்கப்படுகின்றன; தீர்க்கப்படுகின்றன.

இங்கே நீதித்துறை சமூகத்துக்குக் தொடுக்கும் செய்தி. உங்களுக்கு ஆதரவாக நீதி கிடைக்க நீங்கள் பிரபலமாக இருந்தாலும் நீதித்துறை மீது ஆதிக்கம் செலுத்துபவர்கள் உடன் நட்பு வேண்டும் என்பதுதானே?

அவர்கள் வழக்குகளால்தான் நீதி தேவதை தன் கண்கட்டை அவிழ்த்து விடுகிறார்.?

சாதாரண இந்தியனுக்கு மூன்று தவணைகளுக்கு மேல் பிடி ஆணை.

ஆனால் நீதியை வளைப்பவர்களுக்கு 130க்குமேல். இன்னமும் கொடுத்திருப்பார்கள் அதற்குள் பல ஆண்டுகள் ஆனதால் வழக்கு குன்கா மூலம் முடிவுக்கு வந்து விட்டது.

ஆனால் அதன் பின் பிணை வழங்கியதும், மேல் முறையீடு விசாரணைக்கு காலக்கெடு நியமனம் செய்ததும், குற்றவாளியே தன்னை எதிர்த்து வாதாட? அரசு வழக்குரைஞரை நியமனம் செய்ததும் நீதித்துறையின் கருப்புப்பக்கங்கள்.

ராஜீவ் காந்தி படுகொலை 1991இல் நடந்தது. 350க்கும் மேற்பட்டோர் உயிரைப் பறித்த மும்பை தொடர் குண்டுவெடிப்பு 1993இல் நடந்தது. முன்னதைப் பின்னின்று நடத்தியது புலிகள் என்றால், பின்னதைப் பின்னின்று நடத்தியது பாகிஸ்தான் உளவுத் துறை.

பேரறிவாளன் மீதான முக்கிய குற்றச்சாட்டு அவர் குண்டு வெடிப்புக்கு காரணமானவர்கள் வாங்கச்சொன்னதால் என்ன? எதற்கு என்று தெரியாமல் கடையில் இரண்டு மின் கலங்கள் வாங்கிக்கொடுத்தது மட்டும்தான்.

ஆனால் சஞ்சய் தத் மீதான பிரதான குற்றச்சாட்டு தாவூத் இப்ராஹிம் ஆட்கள் கொடுத்த துப்பாக்கிகள், எறிகுண்டுகளை வைத்திருந்தது. மும்பையில் குண்டு வெடித்து விட்டு வந்த தீவிரவாதிகளைத் தன் வீட்டில் இரு நாட்கள் பாதுகாப்பாக வைத்திருந்தது. இது தெரிந்தே நடந்தது.

இரண்டுமே 'தடா' வழக்குகள் ஆகத்தான் விசாரிக்கப்பட்டது.

இன்னும் சொல்லப்போனால், பேரறிவாளன் வழக்கு பல வகைகளில் பலவீனமான வழக்கு.

ஆனால், மின்கலம் வாங்கிக் கொடுத்ததாகச் சொல்லப்படுபவரை, தூக்குக் கயிறு வரை அழைத்துச் சென்றுவிட்டு 24 ஆண்டுகளாகச் சிறைக்குள் வைத்திருக்கிற நீதி, துப்பாக்கி களையும் எறிகுண்டுகளையும் வைத்திருந்தவர் 20 ஆண்டு இழுத்தடிப்புக்குப் பின் 5 ஆண்டுகள் மட்டும் சிறைத் தண்டனை.

ஆனால் அதிலும் முக்கால்வாசி நாட்கள் பரோல். படங்களில் நடித்து தனது தொழிலை சிறப்பாக செய்து வருகிறார்.

இந்த இருபது ஆண்டுகளில் 50 படங்களுக்கு மேல் நடித்து கோடிகளை குவித்து விட்டார்.

ஆனால் பேரறிவாளன்? சிறையில் 24 ஆண்டுகளாக.

தேனை களவாடியவன் சுதந்திரமாக இருக்கிறான். சிந்திய தேனை என்ன வென்று நக்கிப் பார்த்தவன் தூக்கு மேடையை எதிர்பார்த்து நம் நீதித் துறை தேவதை கண் கருப்புத்துணியை இறுக்கி கட்ட வேண்டும் எனபதைத்தவிர நாம் வேறு என்ன சொல்ல? சொன்னால் அது நீதிமன்ற அவமதிப்பாகி விடுமே?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு - 6. வெள்ளவத்தை, பெரகும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட் மார்க் என்டர் பிறைஸ் ஸ்தாபனத்தால். 2015 ஜூன் 10ஆம் திகதி வெளியிடப்பட்டது.